© 
GOVERNMENT OF TAMIL NADU 
2022

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 18.40 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

**சிறப்பு வெளியீடு** ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 247A] சென்னை, புதன்கிழமை, ஏப்ரல் 27, 2022
சித்திரை 14, சுபகிருது, திருவள்ளுவர் ஆண்டு-2053

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

2022 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 27 ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130 ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 27/2022**

**மாநிலத்தில் சித்த மருத்துவம், ஆயுர்வேதா, யுனானி, யோகா & இயற்கை மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆகிய துறைகளுக்கென தனிப் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவி அமைத்தல் மற்றும் ஒருங்கிணைத்தலுக்கு வகை செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்தி மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

**அத்தியாயம்–I.**

**முன்னுரை.**

1. (1) இந்தச் சட்டம் 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு சித்த மருத்துவப் பல்கலைக்கழகச் சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு, அளாவுகை, பொருந்துகை மற்றும் தொடக்கம்.

(2) இது, தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) இது,–

(a) இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு கல்லூரி மற்றும் நிறுவனங்களுக்கு;

(b) இந்தச் சட்டத்தின் கீழ் பல்கலைக்கழகத்திற்கு இணைக்கப்படுவதாக கருதப்படுகின்ற, அல்லது ஒப்புதலளிக்கப்பெற்ற அனைத்து கல்லூரிகள் மற்றும் நிறுவனங்களுக்கு;

(c) இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் அல்லது அதன் கீழ் உருவாக்கப்பட்ட துணைமுறை விதிகள், நிலை விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகளுக்கிணங்க பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்ட அல்லது அதனால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பகுதிக்குள் அமைந்துள்ள ஒவ்வொரு பிற கல்லூரி அல்லது நிறுவனங்கள்; மற்றும்

(d) சித்த மருத்துவப் பல்கலைக் கழகத்தால் பட்டம், பட்டயம் பிற கல்வித் தகுதிகள் பெற படிப்புப்பிரிவு அல்லது பயிற்சிப்பிரிவு வழங்குகின்ற பல்கலைக்கழகப் பகுதிக்குள் அமைந்துள்ள ஒவ்வொரு கல்லூரி மற்றும் நிறுவனங்களுக்குப் பொருந்தும்.

(4) இது, மாநில அரசு அறிக்கையின் வாயிலாக குறிக்கலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

பொருள் வரையறைகள்.

2. இந்தச் சட்டத்தில், தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி,—

(a) "இணைக்கப்பட்ட கல்லூரி" என்பது, பல்கலைக்கழக பரப்பிடத்திற்குள் அமைந்துள்ளதும் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டதும் மற்றும் பல்கலைக்கழகத்தின் பட்டங்கள், பட்டயங்கள் மற்றும் பிற கல்வி சிறப்புத் தகுதிகளுக்கான தேர்வுகளுக்கு அனுமதிப்பதற்கான சித்த மருத்துவம், ஆயுர்வேதா, யுனானி, யோகா & இயற்கை மருத்துவம் மற்றும் ஓமியோபதி பாடப்பிரிவுகளுக்கு வகை செய்கின்றதுமான கல்லூரி அல்லது கல்வி நிறுவனம் எதுவும் எனப் பொருள்படும் மற்றும் இந்தச் சட்டத்தின்படி பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்படவுள்ள நிறுவனங்கள் கல்லூரிகள் அல்லது கல்வி நிறுவனகள் மற்றும் தன்னாட்சி கல்லூரிகள் ஆகியவற்றையும் உள்ளடக்கும்;

(b) "குறிக்கப்பட்ட நாள்" என்பது 1 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்படி, அரசானது அறிவிக்கையின் வாயிலாகக் குறிப்பிடப்பிடலாகும் தேதி எனப் பொருள்படும்;

(c) "ஒப்புதலளிக்கப்பட்ட நிறுவனம்" என்பது,—

(i) பல்கலைக்கழகத்தினால் ஒப்புதலளிக்கப்பட்ட; மற்றும்

(ii) பல்கலைக்கழகத்தின் பட்டங்கள், பட்டயங்கள் மற்றும் பிற கல்வி சிறப்புகளுக்கான தேர்வுகளின் சேர்க்கைக்காக பயிற்சி வழங்கும், பல்கலைக்கழகப் பரப்பிடத்திற்குள் அமைந்துள்ள மருத்துவமனை, மையம் அல்லது பிற நிறுவனம் எதுவும் என்று பொருள்படும்;

(d) "தன்னாட்சி கல்லூரி" என்பது, நிலைவிதிகளினால் அல்லது அவற்றின் கீழ் ஒரு தன்னாட்சி கல்லூரி எனப்பெயர் குறிக்கப்பெற்ற அழைக்கப்பட்ட கல்லூரி எதுவும் எனப் பொருள்படும்;

(e) "கல்லூரி" என்பது, பல்கலைக்கழகத்தால் பேணிவரப்படும் அல்லது அத்துடன் இணைக்கப்பட்டுள்ள மற்றும் பல்கலைக்கழகத்தின் பட்டங்கள், பட்டயங்கள் அல்லது பிற கல்வி சிறப்புகளுக்கான தேர்வுகளுக்கு அனுமதிக்கப்படுவதற்கான சித்த மருத்துவம், ஆயுர்வேதா, யுனானி, யோகா & இயற்கை மருத்துவம் மற்றும் ஓமியோபதி பாடப்பிரிவுகளுக்கு அல்லது பயிற்சிக்கு வகை செய்கின்றதுமான கல்லூரி அல்லது கல்வி நிறுவனங்கள் எதுவும் எனப் பொருள்படும்;

(f) "அரசு" என்பது, மாநில அரசு எனப் பொருள்படும்;

(g) "அரசுக் கல்லூரி" என்பது, இணைப்புப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள கல்லூரி மற்றும் கல்வி நிறுவனம் ஒவ்வொன்றும் எனப் பொருள்படும்;

(h) "மாணவர் விடுதி" என்பது, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கிணங்க, பல்கலைக்கழகத்தால் பேணி வரப்பெறும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட, கல்வி நிறுவனம் மற்றும் பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் தங்கியிருப்பதற்கான ஓரிடம் எனப் பொருள்படும்;

(i) ''இந்திய மருத்துவம்'' என்பது சித்த மருத்துவம், ஆயுர்வேதா, யுனானி, யோகா & இயற்கை மருத்துவ முறை என்று பொருள்படும்;

(j) ''கல்வி நிறுவனம்'' என்பது பல்கலைக்கழகத்தின் பட்டங்கள், பட்டயங்கள் மற்றும் பிற கல்விச் சிறப்புப் பட்டங்களுக்கான தேர்வுகளின் சேர்க்கைக்காக பயிற்சி வழங்கும் மருத்துவமனை, மையம் அல்லது பிற கல்வி நிறுவனம் எதுவும் என்று பொருள்படும்;

மையச் சட்டம் 14/2020.

(k) ''இந்திய மருத்துவ முறைக்கான தேசிய ஆணையம்'' என்பது 2020 ஆம் ஆண்டு இந்திய மருத்துவ முறைக்கான தேசிய ஆணையச் சட்டத்தின் 3–ஆம் பிரிவின் கீழ் அமைத்துருவாக்கப்பட்ட இந்திய மருத்துவ முறைக்கான தேசிய ஆணையம் என்று பொருள்படும்;

மையச் சட்டம் 15/2020.

(l) ''ஓமியோபதிக்கான தேசிய ஆணையம்'' என்பது 2020 ஆம் ஆண்டு ஓமியோபதிக்கான தேசிய ஆணையச் சட்டத்தின் 3–ஆம் பிரிவின் கீழ் அமைத்துருவாக்கப்பட்ட ஓமியோபதிக்கான தேசிய ஆணையம் என்று பொருள்படும்;

(m) ''வகுத்துரைக்கப்பட்ட'' என்பது, நிலை விதிகள், துணைமுறை விதிகள், அல்லது ஒழுங்குமுறை விதிகளினால் வகுத்துரைக்கப்பட்டது எனப் பொருள்படும்;

(n) ''முதல்வர்'' அல்லது ''புலத் தலைவர்'' என்பது, கல்லூரி அல்லது கல்லூரி மற்றும் மருத்துவமனை ஒன்றின் தலைவர் எனப்பொருள்படும்;

(o) ''நிலை விதிகள்'', ''துணைமுறை விதிகள்'' மற்றும் ''ஒழுங்கு முறை விதிகள்'' என்பது, முறையே இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்டு அல்லது தொடர்ந்து செயலாற்றல் பெற்றிருக்கும், பல்கலைக்கழகத்தின் நிலை விதிகள், துணைமுறை விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகள் எனப் பொருள்படும்;

(p) ''இணைப்புப் பட்டியல்'' என்பது, இந்தச் சட்டத்திற்காக இணைக்கப்பட்டுள்ள இணைப்புப் பட்டியல் எனப் பொருள்படும்;

(q) ''மாநிலம்'' என்பது தமிழ்நாடு மாநிலம் என்று பொருள்படும்;

(r) ''ஆசிரியர்கள்'' என்பது, ஆசிரியர்கள் என நிலை விதிகளால் விளம்பப்படலாகும், பல்கலைக்கழகத்தின் ஆய்வுக்கூடங்கள் உள்ளடங்கலாக பல்கலைக்கழகத்தில், இணைக்கப்பெற்ற கல்லூரிகள் அல்லது ஒப்புதல் அளிக்கப்பெற்ற கல்வி நிறுவனங்களில் அல்லது மாணவ விடுதிகளில் கல்வி கற்பிக்கின்ற அத்தகைய உதவிப் பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள், பேராசிரியர்கள் மற்றும் பிற நபர்கள் எனவும் மற்றும் அவர்களை போன்ற பிற நபர்கள் எனவும் பொருள்படும்;

(s) ''பல்கலைக்கழகம்'' என்பது, தமிழ்நாடு சித்த மருத்துவப் பல்கலைக்கழகம் எனப் பொருள்படும்;

(t) ''பல்கலைக்கழகப் பரப்பிடம்'' என்பது, தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் உள்ளடக்கிய பரப்பிடம் எனப் பொருள்படும்;

(u) ''பல்கலைக்கழகக் கல்லூரி'' என்பது, நிறுவப்பெற்ற பல்கலைக்கழகத்தின் பட்டங்கள், பட்டயங்கள் அல்லது பிற கல்வி சிறப்புப் பட்டங்கள் அல்லது பயிற்சிக்கு வகை செய்யும் பல்கலைக்கழகத்தால் பேணிவரப்பெறும் ஒரு கல்லூரி எனப் பொருள்படும்;

மையச் சட்டம் 3/1956.

(v) ''பல்கலைக்கழக மானியக்குழு'' என்பது, 1956 ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானியக்குழுச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறுவி அமைக்கப்பட்டுள்ள குழு எனப் பொருள்படும்;

(w) ''பல்கலைக்கழக ஆய்வுக்கூடம்'' என்பது, பல்கலைக்கழகத்தால் பேணிவரப்பட்ட, அதனால் நிறுவப்பட்ட அல்லது நிறுவப்படாததுமான; ஆராய்ச்சிப் பணியை செய்துவருவதற்காகவும் அதனை மேம்படுத்துவதற்காகவும் நிலைப்படுத்தபட்டுள்ள ஓர் ஆய்வுக்கூடம் எனப் பொருள்படும்;

(x) ''பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர்'', ''பல்கலைக்கழக இணைப் பேராசிரியர்'' அல்லது ''பல்கலைக்கழகப் பேராசிரியர்'' என்பது, பல்கலைக்கழகத்தால் அத்தகையவாறு பணியமர்த்தப்பட்ட அல்லது பணியமர்த்தப்பட்டிருப்பதாகக் கொள்ளப்பட்ட முறையே உதவிப் பேராசிரியர் அல்லது இணைப் பேராசிரியர் அல்லது பேராசிரியர் ஒருவர் எனப் பொருள்படும்;

(y) ''பல்கலைக்கழக நூலகம்'' என்பது, பல்கலைக்கழகத்தால் நிறுவப் பெற்றதாயினும் இல்லாவிடினும், அதனால் பேணி வரப்பெறும் ஒரு நூலகம் எனப் பொருள்படும்.

## அத்தியாயம்—II.

## பல்கலைக்கழகம்.

தமிழ்நாடு சட்டம் 35/1972.

பல்கலைக்கழகம்.

3. (1) ''தமிழ்நாடு சித்த மருத்துவப் பல்கலைக்கழகம்'' என்ற பெயரில் பல்கலைக்கழகமொன்று நிறுவப்படுதல் வேண்டும்.

(2) பல்கலைக்கழகம், நிலையான தொடர்பாட்டினையும் தனித்த ஓர் இலச்சினையும் பெற்றுள்ள ஒரு கூட்டமைப்பாக இருத்தல் வேண்டும், மேலும் மேற்சொன்ன பெயரில், வழக்கிடுதலும், வழக்கிடப்படுதலும் வேண்டும்.

(3) பல்கலைக்கழகத்தின் தலைமையகம், 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (23–a) ஆம் கூறில் வரையறுக்கப்பட்டவாறான சென்னை மாநகர திட்டப் பரப்பிடத்தின் எல்லைகளுக்குள் அமைந்திருத்தல் வேண்டும்.

பல்கலை கழகத்தின் நோக்கங்கள்.

4. பல்கலைக்கழகம் பின்வரும் நோக்கங்களை கொண்டிருத்தல் வேண்டும், அவையாவன:—

(1) இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதியில், தீர்மானிக்கலாகும் அத்தகைய கற்றலுக்கான கிளைகளில் கற்பிப்பதற்கும் பயிற்சியளிப்பதற்கும் வகை செய்தல்;

(2) இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதியில் ஆராய்ச்சி மற்றும் அறிவு மேம்பாட்டிற்காகவும், பரப்புவதற்காகவும் வகை செய்தல்;

(3) பல்கலைக்கழகம் மற்றும் இணைக்கப்பட்ட கல்லூரிகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றிற்குள் பட்டங்கள், சிறப்புப் பட்டங்கள், பட்டயங்கள் மற்றும் பிற படிப்புகளை நிறுவுதல்;

(4) உதவிப் பேராசிரியர் பணிகள், இணைப் பேராசிரியர் பணிகள், பேராசிரியர் பணிகள் மற்றும் பல்கலைக்கழகத்திற்கு தேவைப்படும் பிற ஆசிரியர் பதவிகள் ஆகியவற்றை நிறுவுதல் மற்றும் அத்தகைய உதவிப் பேராசிரியர், இணைப் பேராசிரியர் பணிகள், பேராசிரியர் பணிகள் மற்றும் பிற ஆசிரியர் பணிகளுக்கு நபர்களை நியமித்தல்;

(5) நிலை விதிகளுக்கிணங்க, உதவித் தொகைகள், பயண உதவித் தொகைகள், படிப்புதவித் தொகைகள், மாணவ உதவித் தொகைகள், படித்தொகைகள், கண்காட்சிகள், பதக்கங்கள் மற்றும் பரிசுகளை நிறுவுதல் மற்றும் வழங்குதல்;

(6) ஆராய்ச்சிப் பணியிடங்களை ஏற்படுத்துதல் மற்றும் அத்தகைய பதவிகளுக்கு நபர்களை நியமித்தல்;

(7) மேம்பட்ட ஆய்வுகள் மற்றும் ஆராய்ச்சிப் படிப்புகளுக்கு அவ்வப்போது ஏற்பாடு செய்தல்;

(8) தொடர் மருத்துவக் கல்வி படிப்புகளுக்கு ஏற்பாடு செய்தல்;

(9) இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதியை உள்ளடக்கும் ஒருங்கிணைந்த மருத்துவ முறை ஒன்றை உருவாக்குவதற்கான பலதுறைகள் ஒருங்கிணைந்த ஆய்வு மற்றும் ஆராய்ச்சிகள் மூலம் பல்வேறு மருத்துவ முறைகளை மேம்படுத்துதல், ஆராய்ச்சிக்கான வசதிகளை செய்தல் மற்றும் அவற்றிற்கு இடையேயான சிறந்த புரிதலுக்கு வகை செய்தல்;

(10) பல்கலைக்கழகப் பரப்பிடத்திற்குள் உள்ள கல்லூரிகள், மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்கள் மற்றும் ஆய்வுக் கூடங்களுக்கிடையே ஒத்துழைப்பை ஊக்குவித்தல் மற்றும் பல்கலைக்கழகம் தீர்மானிக்கக்கூடிய முறையிலும் நோக்கங்களுக்காகவும் பிற பல்கலைக்கழகங்களுடனும் பிற அதிகார அமைப்புகளுடனும் ஒத்துழைத்தல்; மற்றும்

(11) உள்ளூர் மற்றும் மண்டல அளவிலான இடர்பாடுகளுடன் பல்கலைக்கழகத்தை நெருக்கமாக இணைப்பதன் மூலமாகவும் பொது சுகாதார நடவடிக்கைகள் மூலமாகவும் தனிநபர்கள் மற்றும் சமூகத்தின் வளர்ச்சிக்கான அறிவு மற்றும் செயல்திறனின் நலன்களை நீட்டித்தல்.

பல்கலைக் கழகத்தின் அதிகாரங்கள்.

5. பல்கலைக்கழகமானது பின்வரும் அதிகாரங்களை கொண்டிருத்தல் வேண்டும், அதாவது:—

(1) தேர்வுகளை நடத்துதல் மற்றும் பட்டங்கள், பட்டயங்கள் மற்றும் பிற கல்வி சிறப்புப் பட்டங்கள் ஆகியவற்றை,—

(a) கல்லூரி ஒன்றிலோ அல்லது பல்கலைக்கழக ஆய்வுக் கூடம் ஒன்றிலோ அல்லது ஒப்புதலளிக்கப் பெற்ற நிறுவனம் ஒன்றிலோ, ஒப்புதலளிக்கப்பெற்ற படிப்புப்பிரிவை அல்லது பயிற்சியைத் தொடர நிலைவிதிகளால் வகுத்துரைக்கப் பட்ட முறையில் விலக்களிக்கப் பட்டிருந்தாலன்றி, அத்தகைய படிப்பு பிரிவைத் தொடர்ந்துள்ள மற்றும் பல்கலைக்கழகத்தால் வகுத்துரைக்கப்பட்ட தேர்வுகளில் தேர்ச்சிபெற்றுள்ள நபர்கள்; அல்லது

(b) நிலை விதிகளில் வகுத்துரைக்கப்பட்டுள்ள வரையரைகளின்படி ஆராய்ச்சியைத் தொடர்ந்த நபரெவருக்கும் வழங்குதல் வேண்டும்;

(2) தன்னாட்சிக் கல்லூரியொன்றில் ஒப்புதல் அளிக்கப்பெற்ற படிப்புப்பிரிவு, பயிற்சி அல்லது ஆய்வினை தொடர்ந்துள்ளவர்களுக்குப் பட்டங்கள், பட்டயங்கள் மற்றும் பிற கல்வி சிறப்புப் பட்டங்கள் ஆகியவற்றை வழங்குதல்;

(3) வகுத்துரைக்கப்பட்ட நிபந்தனைகளின்படி, மதிப்புறு பட்டங்கள் அல்லது பிற மதிப்புறு கல்வி சிறப்புப் பட்டங்கள் வழங்குதல்;

(4) பல்கலைக்கழகத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஆராய்ச்சி நிலையங்கள், பல்கலைக்கழக கல்லூரிகள், துறைகள் ஆய்வுக்கூடங்கள், மருத்துவமனைகள், நூலகங்கள் மற்றும் பிற கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றை நிறுவுதல், பேணுதல் மற்றும் மேலாண்மை செய்தல்;

(5) வகுத்துரைக்கப்பட்ட வரைக்கட்டுகளின்படி, பல்கலைக்கழக பரப்பிடத்திற்குள் உள்ள கல்லூரிகளை, இணைக்கப்பட்ட கல்லூரிகளாக பல்கலைக்கழகத்தில் இணைத்தல் மற்றும் கல்லூரிகளிலிருந்து அத்தகைய இணைப்பை விலக்கிக் கொள்ளுதல்;

வரம்புரையாக, கல்லூரியொன்றை நிறுவுவதற்கு, அரசின் அனுமதி பெறப்பட்டு அவ்வாறு அனுமதிப்பதற்காக, வரையறைகளும் நிபந்தனைகளும் எவையேனுமிருந்து அவை இணங்கி நடக்கப்பட்டாலன்றி அத்தகைய கல்லூரி எதுவும் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்படுதல் ஆகாது;

(6) அரசின் ஒப்புதலுடன் அரசுக் கல்லூரி அல்லது நிறுவனம் எதனின் மேலாண்மையை எடுத்துக் கொள்ளுதல்;

(7) வகுத்துரைக்கப்பட்ட நிபந்தனைகளின் படி பல்கலைக்கழகத்தின் பட்டங்கள், பட்டயங்கள் மற்றும் பிற கல்வி சிறப்புப் பட்டங்களுக்கான தேர்வுகளுக்கு ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான பயிற்சிக்கு வகை செய்கின்ற நிறுவனங்களுக்கு ஒப்புதல் அளித்தல், அவ்வாறு அளிக்கப்பெற்ற ஒப்புதலை விலக்கிக்கொள்ளுதல்;

வரம்புரையாக, கல்வி நிறுவனமொன்றை நிறுவுவதற்கு, அரசின் அனுமதி பெறப்பட்டு அவ்வாறு அனுமதிப்பதற்காக வரையரைகளும் நிபந்தனைகளும் எவையேனுமிருந்து அவை இணங்கி நடக்கப்பட்டாலன்றி அத்தகைய கல்வி நிறுவனம் எதுவும் பல்கலைக்கழகத்தினால் அனுமதியளிக்கப்படுதல் ஆகாது;

(8) வகுத்துரைக்கப்பட்ட நிபந்தனைகளின் படி, கல்லூரி எதனையும் அரசின் இசைவுடன் தன்னாட்சிக் கல்லூரியென பெயரிட்டுக் குறிப்பிடுதல் மற்றும் அவ்வாறு குறிப்பிடப்பட்டதை நீக்கிக் கொள்ளுதல்;

(9) மாணவர் விடுதிகளை நிறுவி, பேணி மற்றும் நிர்வகித்து வருதல், பல்கலைக்கழகத்தால் பேணிவரப்படாத மாணவர் விடுதிகளுக்கு ஏற்பிசைவளித்தல் மற்றும் அவ்வாறு அளிக்கப்பட்ட ஏற்பிசைவினை விலக்கிக்கொள்ளுதல்;

(10) பல்கலைக்கழகத்தின் மாணவர்களின் உடல் நலன் மற்றும் பொது நலன் மற்றும் ஒழுங்குமுறை நடத்தை ஆகியவற்றை எய்தும் வகையில், கல்லூரிகள் மற்றும் நிறுவனங்கள் மூலம் அவர்களின் மீது அத்தகைய கட்டுப்பாட்டினை செலுத்துதல்;

(11) பல்கலைக்கழத்தின் நிலைக்கொடைகளையும் பிற சொத்துக்களையும் மற்றும் நிதியங்களையும் வைத்து நிர்வகித்து வருதல்;

(12) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்குட்பட்டு, மைய அல்லது மாநில அரசு எதுவும் பல்கலைக்கழக மானியக் குழு, வங்கிகள் அல்லது பிற ஒருங்கிணைக்கப்பட்ட அமைப்புகள் ஆகியவற்றிடமிருந்து அரசினால் ஒப்புதலளிக்கப்படலாகும் அத்தகைய நோக்கத்திற்காக பிணையத்துடன் அல்லது இல்லாமல் பணத்தை கடன் வாங்குதல்;

(13) கட்டணங்களை நிர்ணயித்தல் மற்றும் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய கட்டணங்களைக் கோரிப் பெறுதல்;

(14) தேசிய மாணவர் படை, தேசிய சேவை பணி அல்லது இதர அமைப்புகளின் பேணுகைக்காக பல்கலைக்கழக நிதியங்களிலிருந்து, மானியங்களை அளித்தல்;

(15) காலமுறையிலான சான்றளிப்பிற்காக இணைக்கப்பட்ட கல்லூரிகள் மற்றும் ஏற்பளிக்கப்பட்ட நிலையங்களின் கல்வி செயல்திறனை கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்;

(16) இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி மற்றும் அது சார்ந்த மருத்துவ அறிவியல் புலங்கள் ஆகியவற்றில் புதிய துறைகள் மற்றும் ஆய்வு மையங்ளை மேம்படுத்துதல், தரம் உயர்த்துதல் மற்றும் தொடங்குதல்;

பல்கலைக்கழகப் பகுதிக்குள் அமைந்திருக்கும் கல்லூரிகள் பிற பல்கலைக்கழகம் எதனுடனும் இணைக்கப்–படுதலாகாது மற்றும் பல்கலைக் கழகத்தால் கல்லுரிகளுக்கு ஏற்பிசைவளிக்கப் பெறுதல்.

(17) வகுத்துரைக்கக்கூடிய முறையில் ஆய்வு மற்றும் ஆராய்ச்சிகளுக்கான ஓய்வுப் பெற்ற சிறப்புநிலை பேராசிரியர், பயண அல்லது வருகை தரும் பேராசிரியர், பயண உதவித்தொகை, படிப்புதவித்தொகை, ஊக்கத்தொகை பரிசுகள் அல்லது பிற வடிவிலான ஊக்குவிப்புகளை நிறுவுதல் மற்றும் வழங்குதல்;

(18) இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி மற்றும் அது சார்ந்த மருத்துவ அறிவியல் புலங்கள் ஆகியவற்றில் ஆராய்ச்சிகளை நடத்துதல் மற்றும் மேம்படுத்துதல் மற்றும் தகுதியான படைப்புகளின் வெளியீட்டினை மேற்கொள்ளுதல்; மற்றும்

(19) பொதுவாக, பல்கலைக்கழகத்தின் நோக்கங்களை மேம்படுத்துவதற்கு தேவையாயிருக்கக்கூடிய அல்லது விரும்பத்தக்கதாக இருக்கக்கூடிய பிற செயல்கள் அனைத்தையும் செய்தல் அல்லது நடவடிக்கைகள் அனைத்தையும் எடுத்தல்;

6. (1) பல்கலைக்கழகப் பரப்பிடத்திற்குள் இருக்கும், இந்திய மருத்துவம் அல்லது ஓமியோபதி படிப்புப்பிரிவுகள் அல்லது பயிற்சி வழங்கும் கல்லூரி அல்லது நிறுவனம் எதுவும் தமிழ்நாடு அரசு சித்த மருத்துவ பல்கலைக்கழகம் தவிர பிற பல்கலைக்கழங்கள் எதனுடனும் இணைக்கப்படுதல் ஆகாது. பல்கலைக்கழகத்தினால் ஒப்புதலளிக்கப்பட்ட நிறுவனங்கள் அல்லது பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட கல்லூரிகளானவை, பல்கலைக்கழகத்தின் அனுமதி மற்றும் அரசின் ஒப்புதலின்றி இந்தியாவில் அல்லது வெளிநாட்டிலுள்ள பிற பல்கலைக்கழகம் எதனுடனும் எந்த வழியிலும் தொடர்புகொள்ளுதலாகாது. குறிக்கப்பட்ட நாளுக்கு முன்பு இணைக்கப்பட்ட கல்லூரி அல்லது ஒப்புதலளிக்கப்பட்ட நிறுவனம் எதனினாலும் பிற பல்கலைகழகத்துடனான அத்தகைய தொடர்பு எதுவும், அத்தகைய தேதியிலிருந்து அற்றுப்போவதாக கருதப்படுதல் வேண்டும்.

பல்கலைக் கழகத்தில் மாணவர்களைச் சேர்த்து கொள்ளுதல்.

(2) மாநிலத்தில் உள்ள அல்லது மாநிலத்திற்கு வெளியில் உள்ள பிற பல்கலைக்கழகம் எதனுடனும் இணைக்கப்பட்டுள்ள அல்லது அதனோடு தொடர்புடைய அல்லது அதனால் பேணி வரப்படும் கல்லூரி அல்லது கல்வி நிறுவனம் எதுவும் அரசின் மற்றும் தொடர்புடைய பல்கலைக்கழகத்தின் முந்தைய ஒப்புதலளிப்புடனல்லாமல், எந்த நோக்கத்திற்காகவும் பல்கலைக்கழகத்தால் ஏற்பிசைவு அளிக்கப்படுதலாகாது.

7. (1) இந்தச் சட்டத்தின் மற்றும் நிலை விதிகளின் வகைமுறைகளுக்குட்பட்டு பல்கலைக்கழகமானது அனைத்து நபர்களுக்கும் பொதுவானதாக இருத்தல் வேண்டும்.

(2) (1) ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள எதுவும்,—

(a) வகுத்துரைக்கப்பட்ட கல்வித் தகுதியை அல்லது தரத்தைப் பெற்றிருக்காத நபர் எவரையும் படிப்புப் பிரிவு எதிலும் சேர்க்குமாறு;

(b) பட்டம், பட்டயம் அல்லது பிற கல்வி சிறப்புப் பட்டங்கள் வழங்கத் தேவையான குறைந்த அளவு தரத்திற்குக் கீழே கல்விப் பதிவைப் பெற்றுள்ள மாணவர் எவரையும் பல்கலைக்கழகப் பட்டியலில் வைத்திருக்குமாறு; அல்லது

(c) பல்கலைக்கழகத்தின் நலனுக்கு அல்லது பிற மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் உரிமைகளுக்கும் சிறப்புரிமைகளுக்கும் ஊறு விளைவிக்கும் விதத்தில் நடந்து கொள்ளும் நபர் எவரையும் சேர்க்குமாறு அல்லது மாணவர் எவரையும் வைத்திருக்குமாறு; பல்கலைக்கழகத்தைக் கோருதல் கூடாது.

## அத்தியாயம்—III.

## பல்கலைக்கழகத்தின் அலுவலர்கள்.

பல்கலைக் கழகத்தின் அலுவலர்கள்.

8. பல்கலைக்கழகம் பின்வரும் அலுவலர்களை கொண்டிருக்கும் அவர்களானவர்:—

(1) வேந்தர்;

(2) இணை வேந்தர்;

(3) துணை வேந்தர்;

(4) பதிவாளர்;

(5) நிதி அலுவலர்;

(6) தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்;

(7) சித்த மருத்துவம், ஆயுர்வேதம், யுனானி & இயற்கை மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஒவ்வொரு புலங்களின் இயக்குநர்;

(8) நூலகர்; மற்றும்

(9) பல்கலைக்கழகத்தின் அலுவலர்கள் என நிலை விதிகளால் விளம்பப்படக்கூடிய அத்தகைய பிற நபர்கள்.

வேந்தர்.

**9.** (1) தமிழ்நாடு மாநிலத்தின் முதலமைச்சர் பல்கலைக்கழகத்தின் வேந்தராக இருத்தல் வேண்டும். அவர் தமது பதவியின் காரணத்தால், பல்கலைக்கழகத்தின் தலைவராக இருப்பதுடன் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா எதற்கும் தலைமை வகித்து பட்டங்கள், பட்டயங்கள் அல்லது பிற கல்வி சிறப்புப் பட்டங்கள் அவற்றைப் பெறுவதற்கு உரிமையுடையவர்களுக்கு வழங்குவார்.

(2) பல்கலைக்கழத்தின் அதிகார அமைப்புகளுக்கு நபர்களை நியமிப்பதற்கான அதிகாரம் வேந்தருக்கு வழங்கப்பட்டிருக்கிறவிடத்து, வேந்தர், துணை வேந்தருடன் கலந்தாய்வு செய்தும், தேவையான அளவுக்கு மற்றபடி போதிய அளவு பிரதிநிதித்துவம் பெற்றிராதவர்களின் நலன்களுக்கு சார்பாளர்களாக அப்பிரிவுகளைச் சேர்ந்தவர்களைப் பெயர் குறித்து நியமித்தல் வேண்டும்.

(3) வேந்தர், தானே முற்பட்டோ அல்லது விண்ணப்பத்தின் மீதோ நடவடிக்கைகள் எவற்றையும் பொறுத்து, அத்தகைய நடவடிக்கைகளின் முறைமை குறித்தோ அவற்றில் எடுக்கப்பட்ட முடிவு அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணை ஏதொன்றின் சீர்மை, சட்ட முறைமை அல்லது பொருத்தமுடைமை குறித்தோ, தெளிவுற உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு, பல்கலைக்கழத்தின் அலுவலர் எவரின் அல்லது அதிகார அமைப்பு ஏதொன்றின் பதிவுக் கட்டினையும் தருவித்து ஆய்வு செய்யலாம் மற்றும் எந்த நேர்வெதிலும், அத்தகைய முடிவு அல்லது ஆணை எதுவும் திருத்தியமைக்கப்படவோ, அறவு செய்யப்படவோ, எதிர் மாறாக்கப்படவோ அல்லது மறுபரிசீலனைக்காகத் திருப்பியனுப்பி வைக்கப்படவோ வேண்டும் என்று அவருக்குத் தோன்றுமானால் அவர் அதன்படியே ஆணைகளைப் பிறப்பிக்கலாம்:

வரம்புரையாக, இந்த உட்பிரிவின் படியான அதிகாரங்கள் செலுத்தப்படுவதற்காக, வேந்தரிடம் செய்து கொள்ளப்படும் ஒவ்வொரு விண்ணப்பமும், அந்த விண்ணப்பம் தொடர்புடையதாகவிருக்கிற நடவடிக்கை முடிவு அல்லது ஆணை எந்தத் தேதியில் அவ்விண்ணப்பதாரருக்கு தெரிவிக்கப்பட்டதோ, அந்தத் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் செய்து கொள்ளப்படுதல் வேண்டும்:

மேலும் வரம்புரையாக, நபரெவருக்கும், அத்தகைய நபர் தன் முறையீட்டினைச் செய்து கொள்வதற்கான வாய்ப்பொன்று அவருக்கு கொடுக்கப்பட்டிருந்தாலன்றி, ஊறு விளைவிக்கத்தக்கதான ஆணை எதுவும் பிறப்பிக்கப்படுதலாகாது.

(4) நபர் எவருக்கும், வேந்தரின் முந்தைய ஒப்புதலளிப்பின்றி பல்கலைக்கழகத்தால் மதிப்புறு பட்டம் அல்லது பிற கல்வி சிறப்புப் பட்டங்கள் எதுவும் வழங்கப்படுதலாகாது.

(5) வேந்தர், இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின் படி அல்லது அதனை அடியொற்றியோ, அவருக்கு வழங்கப்படக் கூடிய அதிகாரங்களை செலுத்தி வருதல் மற்றும் பிற கடமைகளை புரிந்து வருதலும் வேண்டும்.

இணை வேந்தர்.

**10.** (1) மாநிலத்தில் மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அமைச்சர், பல்கலைக்கழகத்தின் இணை வேந்தராக இருத்தல் வேண்டும்.

(2) இணை வேந்தர், இந்தச் சட்டத்தின்படி அல்லது அதன்படி அவருக்கு வழங்கப்படக்கூடிய அத்தகைய அதிகாரங்களைச் செலுத்தி வருவார் மற்றும் அத்தகைய கடமைகளைப் புரிந்து வருதல் வேண்டும்.

(3) வேந்தர் இல்லாதிருக்கும் போது அல்லது வேந்தர் செயற்பட இயலாதிருக்கும் போது, இணை வேந்தர், வேந்தரின் அனைத்து அதிகாரங்களையும் செலுத்தி அனைத்து கடமைகளையும் ஆற்றுதல் வேண்டும்.

துணை வேந்தர்.

**11.** (1) (2) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்படும் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட மூன்று நபர்களைக் கொண்ட பெயர்ப் பட்டியல் ஒன்றிலிருந்து, வேந்தரால் துணை வேந்தரின் ஒவ்வொரு நியமனமும், செய்யப்படுதல் வேண்டும்; மற்றும் அத்தகைய பட்டியலில் மேற்சொன்ன குழுவின் உறுப்பினர் எவரின் பெயரும் அடங்கியிருத்தல் ஆகாது;

வரம்புரையாக, அக்குழுவினால் அவ்வாறு பரிந்துரை செய்யப்பட்ட பெயர்ப்பட்டியலில் உள்ள நபரெவருக்கும், வேந்தரானவர் ஒப்புதல் அளிக்கவில்லையெனில், (2) ஆம் உட்பிரிவிற்கிணங்கிய வகையில் மூன்று பெயர்களைக் கொண்ட புதிய பெயர்ப்பட்டியலைக் கொடுப்பதற்கு அவர் மற்றொரு குழுவினை அமைத்துருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கலாம் மற்றும் அவர் புதிய பெயர்ப்பட்டியலில் பெயர்க்குறிப்பிட்டுள்ள நபர்களில் எவரொருவரையும் துணைவேந்தராக நியமித்தல் வேண்டும்.

(2) (1) ஆம் உட்பிரிவின் நோக்கத்திற்காக, அந்தக் குழுவானது,—

(i) வேந்தரால் நியமிக்கப்படுபவரும், உச்ச நீதிமன்றம் அல்லது உயர்நீதிமன்றம் எதனின் ஓய்வுபெற்ற நீதிபதியுமான ஒருவரை அல்லது சிறந்த கல்வியாளராக இருக்கும் ஒருவரை;

(ii) அரசினால் நியமிக்கப்படுபவரும், அரசு முதன்மைச் செயலாளர் படிநிலைக்கு குறையாத, மாநில அரசின் ஓய்வு பெற்ற அல்லது பணிபுரியும் அலுவலராக இருப்பவருமான ஒருவரை அல்லது சிறந்த கல்வியாளராக இருக்கும் ஒருவரை; மற்றும்

(iii) ஆட்சி பேரவையினால் நியமிக்கப்படுவரும், சிறந்த கல்வியாளராக இருப்பவருமான ஒருவரைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

*விளக்கம்.*—- இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக, "சிறந்த கல்வியாளர்" என்பது இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறையில்,—

(i) மாநில அரசால் அல்லது மைய அரசால் நிறுவப்பட்ட பல்கலைக்கழகம் எதனின் துணை வேந்தராக இருக்கிற அல்லது இருந்துள்ள; அல்லது

(ii) மாநில அல்லது மைய பல்கலைக்கழகத்தில் அல்லது இரண்டினையும் சேர்த்து, குறைந்தது பத்தாண்டுகள் பேராசிரியராக அனுபவம் பெற்றுள்ள புகழ் பெற்ற கல்வியாளராக இருக்கிற; அல்லது

(iii) தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி அமைப்பின் நிறுவனம் எதனின் இயக்குநராக அல்லது தலைவராக இருக்கிற அல்லது இருந்துள்ள நபர் என்று பொருள்படும்:

வரம்புரையாக, அவ்வாறு நியமிக்கப்பட்ட நபர், பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகளில் எதனின் உறுப்பினராக இருத்தல் ஆகாது அல்லது பல்கலைக்கழகத்துடன் அல்லது கல்லூரி எதனுடனும் அல்லது பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் எதனுடனும் தொடர்புடையவராக இருத்தல் ஆகாது.

(3) துணை வேந்தரின் பணியமர்த்தத்திற்காக குழுவினால் பரிந்துரைக்கப்படும் ஒரு நபர்,—

(a) அதிக அளவிலான திறமை, நேர்மை, ஒழுக்கம் மற்றும் நிறுவனத்துடன் உடன்பாடுடைய சிறந்த கல்வியாளராக இருத்தல் வேண்டும்;

(b) *தமிழ்நாடு அரசு சிறப்பிதழில்* வெளியிடப்பட்ட ஆணை ஒன்றினால் வேந்தரின் மூலம் குறித்துரைக்கப்படலாகும், அத்தகைய கல்வித் தகுதிகள் மற்றும் அனுபவங்களைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(4) வேந்தர், அரசு மற்றும் ஆட்சிப் பேரவையினால் குழுவிற்கு உறுப்பினர்களை நியமிக்கும் நடைமுறையானது, துணைவேந்தரின் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய நாளுக்கு ஆறு மாதங்களுக்கு முன்பே தொடங்குதல் வேண்டும் மற்றும் துணைவேந்தர் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய தேதிக்கு நான்கு மாதங்களுக்கு முன்பே முடிவடைதல் வேண்டும்.

(5) துணை வேந்தராக நியமனம் செய்வதற்கு தகுதியுள்ள நபர்களின் தேர்ந்த பெயர்ப்பட்டியலைத் தயாரிப்பதற்கான நடைமுறையானது, துணைவேந்தர் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக் கூடிய நாளுக்கு முன்பு குறைந்தது நான்கு மாதங்களில் தொடங்குதல் வேண்டும்.

(6) குழுவானது, அது அமைத்துருவாக்கப்பட்ட நாளிலிருந்து நான்கு மாதங்களுக்குள் வேந்தருக்கு தன்னுடைய பரிந்துரையை அனுப்புதல் வேண்டும். குழுவானது தன்னுடைய பரிந்துரையை மேற்சொன்ன கால அளவிற்குள் வேந்தருக்கு சமர்ப்பிக்கபடவில்லையெனில் வேந்தர், அந்தக்குழு தன்னுடைய பரிந்துரையை அனுப்புவதற்கு, மேலும் கால அவகாசம் அளிக்கலாம் அல்லது (2) ஆம் உட்பிரிவிற்கிணங்க, மற்றொரு குழுவை அமைத்துருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.

(7) துணை வேந்தர், மூன்றாண்டு கால அளவிற்குப் பதவி வகிப்பார்:

வரம்புரையாக, துணை வேந்தர், தான் கைப்பட எழுதி வேந்தருக்கு முகவரியிட்டு மற்றும் இரண்டு மாதங்கள் கால அறிவிப்பு கொடுத்ததற்குப் பின்பு பதவியை விட்டு விலகலாம்:

மேலும் வரம்புரையாக, துணை வேந்தராக நியமிக்கப்பெற்ற ஒருவர், தம்முடைய பதவிக்காலத்தின் போது எழுபது வயதினை எய்துவாரானால், அவர் பதவியிலிருந்து ஓய்வு பெறுதல் வேண்டும்.

(8) துணை வேந்தரின் பதவியில் தற்காலிக காலியிடம் ஏதேனும் ஏற்படும் போது அல்லது அத்துணைவேந்தர், நோய், பணிக்கு வராமை என்ற காரணத்தாலோ அல்லது ஏதேனும் பிற காரணத்தாலோ, தம்முடைய பதவியின் அதிகாரங்களைப் புரிந்து வரவும், இயலாதிருப்பாரானால், ஆட்சிப் பேரவையானது, துணைவேந்தரின் அதிகாரங்களைச் செலுத்தி வருவதற்கும், கடமைகளை புரிந்து வருவதற்கும் தேவையான ஏற்பாடுகளை செய்கிறவரையில் பல்கலைக்கழகத்தின் மூத்த பேராசிரியர், துணைவேந்தரின் அதிகாரங்களைச் செலுத்தி வருதலும், கடமைகளைப் புரிந்து வருதலும் வேண்டும்.

(9) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை மேற்கொள்ளுதலில் வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது மறுத்தல் அல்லது அவருக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களை தவறாக பயன்படுத்துதல் காரணங்களில் மற்றும் (10) ஆம் உட்பிரிவின் படி தங்களுக்கு ஆணையிடப்பட்ட விசாரணை ஒன்றின் அறிக்கையை கருத்தில் கொண்டு, அரசினால் வழங்கப்பட்ட ஆலோசனையினாலன்றி துணை வேந்தரானவர் அவரது பதவியிலிருந்து நீக்கப்படுதல் ஆகாது.

(10) (9) ஆம் உட்பிரிவின் கீழ் விசாரணை ஒன்றினை நடத்தும் நோக்கத்திற்காக, அரசானது, உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாக இருக்கும் அல்லது இருந்துள்ள அல்லது அரசு தலைமைச் செயலாளர் படிநிலைக்குக் குறையாத அலுவலராக இருக்கும் அல்லது இருந்துள்ள நபரொருவரை பணியமர்த்துதல் வேண்டும். விசாரணை அதிகார அமைப்பானது துணை வேந்தரால் முறையீடு செய்வதற்கான வாய்ப்பொன்றை வழங்கிய பிறகு விசாரணையை நடத்துதல் வேண்டும் மற்றும் விதிக்கப்படவேண்டிய தண்டனை, ஏதேனும் இருப்பின், அது உள்ளடங்கலாக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கையின் மீது அரசுக்கு அறிக்கை ஒன்றினை சமர்ப்பித்தல் வேண்டும் மற்றும் அரசானது அவ்வறிக்கையினை கருத்தில் கொண்டு வேந்தருக்கு ஆலோசனை வழங்குதல் வேண்டும். வேந்தரானவர் அத்தகைய ஆலோசனைக்கிணங்கி, கூடிய விரையில், நேர்வெதிலும் மூன்று மாதங்களுக்குள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(11) துணை வேந்தர், பல்கலைக்கழகத்தின் ஒரு முழுநேர அலுவலராக இருப்பார்; மற்றும் அவருடைய ஊதியங்களும் பணி குறித்த வரையறைகளும் நிபந்தனைகளும் பின்வருமாறு இருத்தல் வேண்டும்;—

(a) துணை வேந்தருக்கு மாதம் ஒன்றுக்கு நிர்ணயிக்கப்பட்ட சம்பளம் ரூபாய் இரண்டு லட்சம் அல்லது அரசால், அவ்வப்போது, நிர்ணயிக்கப்படக்கூடிய, அத்தகைய உயர்வான சம்பளம் கொடுக்கப்படுதல் வேண்டும். மற்றும் அவருடைய பதவிக் காலம் முழுவதும் அறைகலன்களுடனான குடியிருப்பொன்றை வாடகை செலுத்தமின்றிப் பயன்படுத்துவதற்கு அவர் உரிமைத் தகுதியுடையவராவார்; மேலும் அத்தகைய குடியிருப்பைப் பேணி வருவது பொறுத்த செலவுப் பொறுப்பு எதுவும் தனிப்பட்டு அத்துணைவேந்தரை சார்தல் ஆகாது. நிலைவிதிகளில் வகை செய்யக்கூடிய அத்தகைய பிற இடை ஆதாயம் பெற உரிமையுடைவராவார்;

(b) துணை வேந்தர், அவ்வப்போது வேந்தரின் ஒப்புதலுடன், ஆட்சிப் பேரவையால் தீர்மானிக்கப்படக் கூடிய பணிமுடிவு நிலை நன்மைகளுக்கும் படித்தொகைகளுக்கும் உரிமைத் தகுதியுடையராகுதல் வேண்டும்:

வரம்புரையாக,

(i) பல்கலைக்கழகத்தின்; அல்லது

(ii) பிற பல்கலைக்கழகம் எதனின் அல்லது பல்கலைக்கழகம் எதனாலும் பேணிவரப் பெறும் அல்லது அதனோடு இணைக்கப்பெற்றுள்ள கல்லூரி அல்லது கல்வி நிறுவனத்தின் பணியாளர் ஒருவர், துணை வேந்தராக நியமிக்கப்படுமிடத்து, அவர் தொகையளிப்புச் செய்பவராக உள்ள வருங்கால வைப்பு நிதியத்திற்கு தொடர்ந்து தொகையளிக்க அவர் அனுமதிக்கப்பெறுவார். மேலும், பல்கலைக்கழகத்தின் பங்களிப்பானது, துணை வேந்தராக அவர் நியமிக்கப்படுவதற்கு அடுத்து முன்பு அவர் பங்களித்திருந்த அளவுக்கு மட்டுப்படுத்தப்படுதல் வேண்டும்;

(c) துணை வேந்தர், ஆட்சிப் பேரவையினால் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய வீதங்களில் பயணப்படிகளுக்கு உரிமைத் தகுதியுடைவராயிருத்தல் வேண்டும்;

(d) துணை வேந்தர், செயலார்ந்த பணியிலிருக்கையில் அவரால் பணியில் செலவழிக்கப்பட்ட கால அளவுகளில் பதினொன்றில் ஒரு பங்கு முழுச் சம்பளத்துடன் கூடிய ஈட்டிய விடுப்புக்கு அவர் உரிமைத் தகுதியுடைவராயிருப்பர்;

வரம்புரையாக, அவரது பதவிக் கால அளவு முடிவடைந்த தேதியன்று, அவரது பதவிக் கால அளவின் முடிவடையும் தேதிக்கு முன்பாக ஈட்டிய விடுப்பானது அவரால் எடுக்கப்படாமல் இருந்தால், அவரது பதவியை விட்டு விலகியதற்குப் பின்னர் பெருமளவு இருநூற்று நாற்பது நாட்களுக்கு உட்பட்டு தம்முடைய கணக்கில் இருப்பில் உள்ள ஈட்டிய விடுப்பைப் பொறுத்து, விடுப்பு சம்பளத்திற்கு சம மதிப்புள்ள பணத்தைப் பெறுவதற்கு அவர் உரிமைத் தகுதி உடையவராய் இருப்பார்.

(e) துணை வேந்தரானவர், அவரது பதவிக் கால அளவின் போது மூன்று மாதங்களுக்கு மேற்படாத கால அளவு ஒன்றுக்கு சம்பளமின்றி மருத்துவக் காரணங்களுக்காக அல்லது பிறவாறாக விடுப்பு எடுத்துக் கொள்வதற்குத் தகுதி உடையவராவார்:

வரம்புரையாக, அத்தகைய விடுப்பானது (d) எனும் கூறின்படி எந்த அளவுக்கு ஈட்டிய விடுப்புக்கு அவர் உரிமைத் தகுதியுடையவராயிருக்கின்றாரோ, அந்த அளவுக்கு முழுச் சம்பளத்துடன்கூடிய விடுப்புக்கு மாற்றிக் கொள்ளப்படலாம்.

துணை வேந்தரின் அதிகாரங் களும் கடமைகளும்.

12. (1) துணை வேந்தர், பல்கலைக்கழகத்தின் கல்வித் தலைவராகவும் முதன்மை நிர்வாக அலுவலராகவும் இருத்தல் வேண்டும்.

(2) வேந்தர் மற்றும் இணை வேந்தரும் வருகை தராதவிடத்து, துணை வேந்தரானவர், பல்கலைக்கழகத்தில் பட்டமளிப்பு விழா எதிலும் தலைமை வகித்து பட்டங்கள், சிறப்புப்பட்டங்கள், பட்டயங்கள் அல்லது பிற கல்விச் சிறப்புகள் ஆகியவற்றை பெறுவதற்கு உரிமைத்தகுதிடைய நபர்களுக்கு அவற்றை வழங்குவார்.

(3) துணை வேந்தர், பல்கலைக்கழகத்தின் அலுவல்கள் மீது கட்டுப்பாட்டைச் செலுத்துவதற்கும் பல்கலைக்கழகத்தில் உரிய முறையில் ஒழுக்கத்தினைப் பேணுவதற்கும் பொறுப்பினைக் கொண்டவராவார்.

(4) துணை வேந்தரானவர், இதன்கீழ் செய்யப்பட்ட சட்டம் மற்றும் நிலைவிதிகள், துணைமுறை விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகளின் வகைமுறைகளின் உண்மையான பின்பற்றுதலை உறுதி செய்தல் வேண்டும் மற்றும் அந்த நோக்கத்திற்காக தேவையானதாகும் அனைத்து அதிகாரங்களையும் அவர் செலுத்தலாம்;

(5) பல்கலைக்கழகத்தின் ஆசிரியர்கள் மற்றும் பிற பணியாளர்களின் பணியமர்த்தம், பணி இடைநீக்கம் மற்றும் பணி நீக்கம் தொடர்பான ஆட்சிக்குழுவின் ஆணைகள் மற்றும் ஆட்சிக்குழுவின் பிற முடிவு எதற்கும் துணை வேந்தரானவர், செயல்வடிவம் கொடுத்தல் வேண்டும்.

(6) நெருக்கடியான காலம் எதிலும், துணை வேந்தர் உடனடியாக நடவடிக்கை எடுப்பது தேவையெனக் கருதுவாராயின், அவர் ஆணையின் வாயிலாக அவசியமென அவர் கருதலாகிற நடவடிக்கையை எடுத்தல் வேண்டும், மற்றும் அவர் எடுத்த நடவடிக்கை பற்றிய அறிக்கையை, வழக்கமான முறையில் அந்தப் பொருட்பாட்டின் மீது நடவடிக்கை மேற்கொள்ளும் அத்தகைய அலுவலருக்கு அல்லது அதிகார அமைப்புக்கு அல்லது அமைப்புக்கு இயன்ற வரை விரைவில் அறிவித்தல் வேண்டும்:

வரம்புரையாக, பாதிக்கப்படக் கூடியவருக்கு, கேட்கப்படுவதற்கான நியாயமான வாய்ப்பொன்று வழங்கப்பட்டிருந்தாலன்றி, அத்தகைய ஆணை எதுவும் பிறப்பிக்கப்படுதலாகாது.

(7) (6) ஆம் உட்பிரிவின் படியான துணை வேந்தரின் ஆணை எதனாலும், பாதிக்கப்பட்ட நபர் எவரும் அவருக்கு அத்தகைய ஆணையானது தெரிவிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள்ளாக ஆட்சிக் குழுவிற்கு மேல்முறையீடு ஒன்றை அளிக்கலாம் மற்றும் துணை வேந்தர் அத்தகைய மேல்முறையீட்டின் பேரில் ஆட்சிக் குழுவினால் பிறப்பிக்கப்பட்ட ஆணைக்குச் செயல் வடிவம் கொடுத்தல் வேண்டும்.

(8) துணை வேந்தரானவர் ஆட்சிப் பேரவை, ஆட்சிக்குழு, கல்விமன்ற நிலைக்குழு, திட்டக்குழு மற்றும் நிதிக்குழு ஆகியவற்றின் பதவி வழித் தலைவராக இருத்தல் வேண்டும். துணைவேந்தர், பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்பு அல்லது பிற அமைப்பு எதனின் கூட்டமெதிலும் வந்திருந்து உரை நிகழ்த்துவதற்கு உரிமைத் தகுதியுடையவராயிருப்பார், ஆனால் அத்தகைய அதிகார அமைப்பின் அல்லது அமைப்பின் உறுப்பினர் ஒருவராக அவர் இருந்தாலன்றி அதில் வாக்களிக்க உரிமைத் தகுதியுடையவராகமாட்டார்.

(9) துணை வேந்தர், ஆட்சிப் பேரவை, ஆட்சிக்குழு, கல்விமன்ற நிலைக்குழு, மற்றும் நிதிக்குழு ஆகியவற்றின் கூட்டங்களைக் கூட்டுவதற்கு அதிகாரம் பெற்றிருப்பார்.

(10) துணை வேந்தர், கற்பித்தல், மற்றும் ஆராய்ச்சி, விரிவாக்கக் கல்வி மற்றும் பாடத்திட்ட மேம்பாடு ஆகியவற்றிற்கான ஒத்திசைவிற்கும் ஒருங்கிணைப்பிற்கும் பொறுப்புடையராய் இருத்தல் வேண்டும்.

(11) துணை வேந்தர், நிலைவிதிகளில் வகுத்துரைக்கப்படலாகும் பிற அதிகாரங்களைச் செலுத்தி வருவார் மற்றும் அத்தகைய பிற கடமைகளைப் புரிந்து வருவார்.

பதிவாளர்.

13. (1) ஆட்சிக்குழுவால் பணியமர்த்தப்பட்ட பதிவாளரானவர், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய வரையறைகள் மற்றும் நிபந்தனைகளின் பேரில் பல்கலைக்கழகத்தின் ஊதியம் பெறும் முழுநேர அலுவலராக இருத்தல் வேண்டும்.

(2) பதிவாளரானவர் ,–

(a) இந்திய மருத்துவம் அல்லது ஓமியோபதி துறை எதிலாயிலும் முதுநிலை கல்வித் தகுதியுடன், பல்கலைக்கழகத் துறையில் அல்லது இணைக்கப்பட்ட கல்லூரியில் ஐந்து ஆண்டுகள் அனுபவம் பெற்ற பேராசிரியரின் படிநிலைக்கு குறையாத கல்வியாளர் ஒருவர்; அல்லது

(b) அரசு துணைச் செயலாளரின் படிநிலைக்குக் குறையாத அரசு அலுவலர் ஒருவராக இருத்தல் வேண்டும்.

(3) பதிவாளரானவர், மூன்று ஆண்டுகள் கால அளவிற்கு பதவி வகித்தல் வேண்டும் மற்றும் மேலுமொரு மூன்று ஆண்டுகள் கால அளவிற்கு மறு பணியமர்த்தத்திற்கு தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்:

வரம்புரையாக, பதிவாளராக பணியமர்த்தப்பட்ட நபரெவரும் அறுபது வயதை அடைகையில் பதவி வகித்தலாகாது.

(4) பதிவாளரானவர், ஆட்சிப் பேரவை, ஆட்சிக்குழு, கல்விமன்ற நிலைக்குழு, மற்றும் புலங்கள், ஆகியவற்றின் பதவிவழிச் செயலாளராக இருத்தல் வேண்டும். ஆனால், இந்த அதிகார அமைப்புகளில் ஏதொன்றின் உறுப்பினராக கருதலாகாது.

(5) பதிவாளரின், பதவி காலியாக இருக்கும் போது அல்லது பதிவாளர் நோய், பணிக்கு வராமை என்கிற காரணத்தால் அல்லது பிற காரணம் எதற்காகவேணும் தம்முடைய பதவிக் கடமைகளை ஆற்றுவதற்கு இயலாதவராக இருக்கும் போது பதிவாளரின் பதவிக் கடமைகள் அந்த நோக்கத்திற்காக துணை வேந்தர் நியமிக்கும் ஒருவரால் புரிந்துவரப்படுதல் வேண்டும்.

(6) (a) நிதிக்குழு மற்றும் ஆட்சிக்குழுவின் முடிவிற் கிணங்கி அறக்கட்டளை மற்றும் அறக்கொடைச் சொத்துக்கள் உள்ளடங்கலாக பல்கலைக்கழகத்தின் சொத்துக்கள் மற்றும் முதலீடுகளை மேலாண்மை செய்தல்;

(b) பதிவுக்கட்டுகள், தனித்த இலச்சினைகள் மற்றும் ஆட்சிக்குழு போன்ற பல்கலைக்கழகத்தின் பிற சொத்துக்கும் பாதுகாவலராக இருத்தல் வேண்டும்;

(c) ஆட்சிப் பேரவை, ஆட்சிக்குழு, கல்விமன்ற நிலைக்குழு, புலங்கள், பாடக்குழுக்கள், தேர்வாளர் குழுக்கள் மற்றும் பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகளினால் நியமிக்கப்படும் குழு எதனின் கூட்டங்களையும் கூட்டுகிற அறிவிப்பு அனைத்தையும் வழங்குதல்;

(d) ஆட்சிப் பேரவை, ஆட்சிக்குழு, புலங்கள், பாடக்குழுக்கள், தேர்வாளர் குழுக்கள் மற்றும் பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகளினால் நியமிக்கப்படும் குழு எதனின் கூட்ட நடவடிக்கைகள் அனைத்தையும் பற்றிய நடவடிக்கைக் குறிப்பேடுகளை பேணி வருதல்;

(e) ஆட்சிப் பேரவையின் அலுவலக தொடர்புகளை நடத்துதல்; ஆகியன பதிவாளரின் செயற் கடமைகளாக இருத்தல் வேண்டும்.

(7) பல்கலைக்கழத்தினால் அல்லது அதற்கு எதிராகத் தொடரப்படும் அனைத்து உரிமை வழக்குகள் மற்றும் பிற சட்ட நடவடிக்கைகளில், வாதுரைகளானது சரிபார்த்தல் மற்றும் பதிவாளரால் கையொப்பமிடப்படுதல் வேண்டும்; மற்றும் அத்தகைய உரிமை வழக்குகளில் மற்றும் நடவடிக்கைகளில் நீதிமுறைக் கட்டளைகள் அனைத்தும் பதிவாளருக்கு வழங்கப்பட்டு, அவருக்குச் சார்வு செய்யப்படுதல் வேண்டும்;

(8) (a) பதிவாளரானவர், ஆட்சிப்பேரவையின் ஆணையில் குறித்துரைக்கப்படலாகும் பல்கலைக்கழக ஆசிரியர்கள் மற்றும் கல்வித் துறை பணியாளர்கள் நீங்கலாக, பணியாளர்களின் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கு மற்றும் விசாரணை நிலுவையில் இருக்கும் போது அவர்களை தற்காலிக வேலை நீக்கம் செய்வதற்கு அவர்களுக்கு நிர்வாக எச்சரிக்கை விடுப்பதற்கு அல்லது அவர்கள் மீது கண்டனம் விதிப்பதற்கு அல்லது ஊதிய உயர்வை நிறுத்தி வைப்பதற்குமான அதிகாரத்தை பெற்றிருப்பார்:

வரம்புரையாக, தொடர்புடைய நபருக்கு, அவரை பொறுத்து எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கைக்கெதிராக காரணத்தை எடுத்துரைப்பதற்கான நியாயமானதொரு வாய்ப்பு அவருக்கு கொடுக்கப்பட்டிருந்தாலன்றி, அத்தகைய தண்டனை எதுவும் விதிக்கப்படுதலாகாது.

(b) (a) கூறில், குறித்துரைக்கப்பட்டுள்ள தண்டத்தொகை எதையும் விதிக்கின்ற பதிவாளரின் ஆணை எதற்கும் எதிராக துணைவேந்தரிடம் மேல்முறையீடு செய்யலாம்.

(c) பதிவாளரின் அதிகாரங்களுக்கு அப்பாற்பட்ட தண்டத்தொகை தேவைப்படுகிறது என்று அந்த விசாரணை வெளிப்படுத்துகிற நேர்வு எதிலும், பதிவாளர், அந்த விசாரணை முடிவடைவதன் பேரில் தம்முடைய பரிந்துரைகளோடு அறிக்கை ஒன்றை செய்து துணைவேந்தருக்குக் கொடுத்தல் வேண்டும்:

வரம்புரையாக, தண்டத்தொகை எதையும் விதிக்கின்ற துணைவேந்தரின் ஆணை ஒன்றுக்கு எதிராக ஆட்சிக் குழுவிடம் மேல்முறையீடு ஒன்றைச் செய்யலாம்.

(d) (b) ஆம் கூறு அல்லது (c) ஆம் கூறின்கீழ் மேல்முறையீடு செய்யப்பட்ட ஆணை விண்ணப்பதாரரால் பெறப்பட்ட தேதியிலிருந்து அறுபது நாட்கள் முடிவடைந்த பின்பு எந்தவொரு மேல்முறையீடும் அளித்தலாகாது.

(9) பதிவாளரானவர் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய அதிகாரங்களை செலுத்துதல் மற்றும் அத்தகைய பிற செயற்பணிகளை செய்தல் மற்றும் அத்தகைய கடமைகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

நிதி அலுவலர்.

**14.** (1) ஆட்சிக் குழுவால் நியமிக்கப்பட்ட நிதி அலுவலர் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய கால அளவிற்கு பல்கலைக்கழகத்தின் ஊதியம் பெறும் முழுநேர அலுவலராக இருத்தல் வேண்டும்.

(2) நிதி அலுவலரின் நியமனம் ஒவ்வொன்றும், அரசினால் மேற்குறித்து அனுப்பப்படும் மூன்று அலுவலர்களைக் கொண்ட பெயர்ப் பட்டியலின் மீது துணை வேந்தரின் பரிந்துரையின் பேரில் ஆட்சிக்குழுவால் செய்யப்படுதல் வேண்டும்.

(3) நிதி அலுவலரின் ஊதியங்களும் பிற பணி வரையறைகள் மற்றும் நிபந்தனைகள் வகுத்துரைக்கப்படக்கூடியவாறு இருத்தல் வேண்டும்.

(4) நிதி அலுவலர், அறுபது வயதினை எய்தியதின் பேரில் அல்லது வகுத்துரைக்கப்படலாகும் கால அளவு முடிவடைவதன் பேரில் இவற்றில் எது முந்தையதோ அதன் பேரில் ஓய்வு பெறுதல் வேண்டும்.

(5) நிதி அலுவலரின் பதவி காலியாக இருக்கும்போது அல்லது நிதி அலுவலர், நோய், பணிக்கு வராமை என்கிற காரணத்தால் அல்லது பிற காரணம் எதனாலேனும் தம்முடைய பதவிக் கடமைகளை ஆற்றுவதற்கு இயலாதவராக இருக்கும்போது நிதி அலுவலரின் பதவிக்கடமைகள் அந்த நோக்கத்திற்காக துணை வேந்தர் நியமிக்கக்கூடிய அத்தகைய நபரால் ஆற்றுதல் வேண்டும்.

(6) நிதி அலுவலர், நிதிக்குழுவின் பதவி வழிச் செயலாளராக இருத்தல் வேண்டும், மற்றும் அத்தகைய குழுவின் உறுப்பினராக கருதப்படுதலாகாது.

(7) நிதி அலுவலர்,—

(a) பல்கலைக்கழகத்தின் நிதியங்களின் மீது பொதுவான கண்காணிப்பைச் செலுத்தி வருதல் மற்றும் பல்கலைக்கழகத்தின் நிதிக்கொள்கை குறித்து அதற்கு ஆலோசனை வழங்குதல்; மற்றும்

(b) ஆட்சிக் குழுவினால் அவருக்குக் குறித்தளிக்கப்படலாகும் அல்லது வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய அதிகாரங்களைச் செலுத்தி வருதல் மற்றும் அத்தகைய பிற நிதி சார்ந்த அலுவல்களைப் புரிந்து வருதலும் வேண்டும்:

வரம்புரையாக, நிதிஅலுவலர், ஆட்சிக் குழுவின் முன் ஒப்புதலின்றி செலவு எதையும் செய்தலோ, வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய தொகைக்கு மேற்படும் முதலீடு எதையும் செய்தலோ ஆகாது.

(8) ஆட்சிக் குழுவின் கட்டுபாட்டு அதிகாரத்திற்குட்பட்டு, நிதி அலுவலர்,—

(a) ஓராண்டிற்கான தொடர் மற்றும் தொடராச் செலவினங்களுக்காக ஆட்சிக் குழுவால் நிர்ணயிக்கப்பட்ட வரம்புகளுக்கு மேற்படாதவாறும் பணங்கள் அனைத்தும் அவை வழங்கப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்ட நோக்கங்களுக்காகச் செலவிடப்படுவதை உறுதி செய்தல்;

(b) பல்கலைக்கழகத்தின் ஆண்டுக் கணக்குகள், நிதி மதிப்பீடுகள் மற்றும் வரவு – செலவுத் திட்டம் ஆகியவற்றைத் தயாரிப்பதற்கும் நிதிக்குழு மற்றும் ஆட்சிக் குழுவிடம் அவற்றை அளிப்பதற்கும் பொறுப்புடையவராய் இருத்தல்;

(c) பணம் மற்றும் வங்கி இருப்புகளையும் முதலீடுகளையும் இடைவிடாது கண்காணித்தல்;

(d) வருவாய் வசூலித்தலின் வளர்ச்சியைக் கண்காணித்து வசூல் செய்வதற்குப் பயன்படுத்தும் முறைகள் குறித்த ஆலோசனை வழங்குதல்;

(e) அறக்கட்டளை மற்றும் அறக்கொடை சொத்து உள்ளடங்கலான பல்கலைக் கழகத்தின் முதலீடு மற்றும் சொத்தினை வைத்திருத்தல் மற்றும் மேலாண்மை செய்தல்;

(f) கட்டடங்கள், நிலங்கள், அறைகலன்கள் மற்றும் சாதனங்கள் ஆகியவற்றின் பதிவேடுகள் நாளது தேதிவரை வைத்துப் பேணிவரப்படுவதையும், பல்கலைக்கழகத்தினால் பேணிக்காக்கப்படும் அலுவலகங்கள், மையங்கள், ஆய்வுக் கூடங்கள் மற்றும் கல்லூரிகள் ஆகிய அனைத்திலுமுள்ள சாதனங்கள் பிற நுகரதக்க பொருள்களின் இருப்பு நிலையைச் சரிபார்க்கும் பணி நடத்தப்படுவதையும் உறுதி செய்து கொள்ளுதல்;

(g) அதிகாரமளிக்கப்படாத செலவினம் எதுவும் பற்றி அல்லது பிற நிதிசார் முறைகேடு பற்றித் துணைவேந்தரின் கவனத்திற்குக் கொண்டு வருதல்; மற்றும் தவறு செய்துள்ளவர் மீது எடுக்கப்பட வேண்டிய உரிய நடவடிக்கை குறித்த கருத்தாலோசனை வழங்குதல்; மற்றும்

(h) அவரின் கடமைகளைப் புரிவதற்காகத் அவர் தேவையெனக் கருதலாகும் தகவல் அல்லது விவர அறிக்கைகள் எவற்றையும் பல்கலைக்கழகத்தினால் பேணி வரப்படும் அலுவலகம், துறை, மையம், ஆய்வுக் கூடம் மற்றும் கல்லூரி ஆகிய எதிலிருந்தும் தருவித்தலும் வேண்டும்.

(9) பல்கலைக்கழகத்திற்கு செலுத்தத்தக்க பணம் எதற்காகவும் நிதி அலுவலரோ அல்லது ஆட்சிக் குழுவால் இதற்கென உரியவாறு அதிகாரமளிக்கப்பட்ட நபரோ அல்லது நபர்களோ, அளிக்கும் பற்று சீட்டானது, அத்தகைய பணம் செலுத்தப் பட்டதற்கான போதிய நிறைவேற்ற சான்றாகும்.

தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்.

**15.** (1) தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலரானவர், ஒரு பல்கலைக்கழகத் துறையில் அல்லது இணைக்கப்பட்ட கல்லூரி எதனில் ஐந்து ஆண்டுகளுக்கு குறையாமல் பணியாற்றிய ஒரு பேராசிரியரின் படிநிலைக்குக் குறையாத, இந்திய மருத்துவம் அல்லது ஓமியோபதி துறை எதிலாயிலும் முதுநிலை கல்வித் தகுதியுடைய ஒரு கல்வியாளராக இருத்தல் வேண்டும். வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய வரையறைகள் மற்றும் நிபந்தனைகளின் பேரில் ஆட்சிக்குழுவினால் நியமிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் ஒரு முழு நேர அலுவலராக அவர் இருத்தல் வேண்டும்.

(2) தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலரானவர் மூன்று ஆண்டுகள் காலஅளவிற்கு பதவி வகித்தல் வேண்டும் மற்றும் மேலும் ஒரு மூன்று ஆண்டுகள் காலஅளவிற்கு மறுபணியமர்த்ததிற்கு தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்:

வரம்புரையாக, தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலராக பணியமர்த்தப்பட்ட நபரெவரும் வயது முதிர்வின் காரணமாக பணி ஓய்வு வயதினை அடைகையில் பதவி வகித்தல் கூடாது.

(3) தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர், வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய அதிகாரங்களைச் செலுத்தி வருதல் மற்றும் அத்தகைய கடமைகளைப் புரிந்து வருதலும் வேண்டும்.

இயக்குநர்கள்.

**16.** (1) இந்திய மருத்துவ முறை ஒவ்வொன்றிற்கும் அதாவது சித்த மருத்துவம், ஆயுர்வேதா, யுனானி, யோகா & இயற்கை மருத்துவம் மற்றும் ஓமியோபதிக்காக துணை வேந்தரால் பணியமர்த்தப்படக்கூடிய இயக்குநர் ஒருவர் இருத்தல் வேண்டும்,

(2) இயக்குநரானவர், பல்கலைக்கழகத் துறையில் அல்லது இணைக்கப்பட்ட கல்லூரியில் மூன்று ஆண்டுகள் பேராசிரியராக இருக்கும் ஒருவரின் படிநிலைக்குக் குறையாத தொடர்புடைய மருத்துவ முறையில் முதுநிலைக் கல்வித் தகுதியுடைய கல்வியாளரொருவாக இருத்தல் வேண்டும்.

(3) இயக்குநரானவர் மூன்று ஆண்டுகள் காலஅளவிற்கு பதவி வகித்தல் வேண்டும் மற்றும் அவரது இறுதி பதவிக்காலம் முடிவடைந்த பிறகு குறைந்தது மூன்று ஆண்டுகள் முடிவடைந்தாலன்றி நபரெவரும் மறு பணியமர்த்தத்திற்கு தகுதியுடையவராயிருத்தல் கூடாது.

(4) இயக்குநரானவர் தொடர்புடைய மருத்துவமுறையில் கல்வி மற்றும் ஆராய்ச்சி செயல்பாடுகளின் பின்பற்றலுக்கு பொறுப்பாளராக இருத்தல் வேண்டும்.

(5) இயக்குநரானவர் பாடத்திட்டக் குழுக்கள் மற்றும் புலன்களின் கூட்டங்களில் தலைமை வகித்தல் வேண்டும் மற்றும் அதன் நடவடிக்கைகளை பதிவு செய்தல் வேண்டும்.

நூலகர்.

**17.** (1) நூலகரானவர், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய வரையறைகள் மற்றும் நிபந்தனைகளின் பேரில் அத்தகைய காலஅளவிற்காக, அந்த நோக்கத்திற்காக அமைத்துருவாக்கப்பட்ட தெரிவுக்குழுவின் பரிந்துரையின் பேரில் ஆட்சிக்குழுவால் நியமிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் ஒரு முழுநேர அலுவலராக இருத்தல் வேண்டும்.

துணை வேந்தர் மற்றும் பிற அலுவலர்கள் முதலியோர் அரசுப் பணியாளர்களாக இருத்தல்.

**18.** துணைவேந்தர், பதிவாளர், நிதி அலுவலர், தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் மற்றும் பல்கலைக்கழகத்தின் பிற பணியாளர்கள், இச்சட்டத்தின் வகைமுறைகள் எதனையும் இணக்கத்துடன் செயல்படுகையில் அல்லது செயல்பட இருக்கையில் இந்திய தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் பொருளில் பொது ஊழியராக இருப்பதைப்போன்று கருதப்படுதல் வேண்டும்.

மையச்சட்டம் XLV/1860

## அத்தியாயம்–IV.

## பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகள்.

19. பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகள் பின்வருவனவாக இருத்தல் வேண்டும், அதாவது:– பல்கலைக் கழகத்தின் அதிகார அமைப்புகள்.

(1) ஆட்சிப்பேரவை;

(2) ஆட்சிக்குழு;

(3) நிதிக்குழு;

(4) கல்விமன்ற நிலைக்குழு;

(5) புலங்கள்;

(6) பாடத்திட்டக்குழுக்கள்;

(7) திட்டக்குழு; மற்றும்

(8) நிலைவிதிகளால் பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகள் என விளம்புகை செய்யப்படலாகும் அத்தகைய பிற அமைப்புகள்.

20. (1) நபரெவரும், தேர்தல் அல்லது பெயர் குறித்து நியமிக்கப்படும் தேதியன்று அவர்.– உறுப்பினர் பதவிக்கான தகுதிக்கேடு.

(a) மனச்சீர்கேடுற்றவராகவோ; அல்லது

(b) நொடிப்பு நிலையரொருவராக நீதிமுறையில் திர்மானிக்கப்பட வேண்டி விண்ணப்பித்துக் கொண்டுள்ள ஒருவராக அல்லது விடுவிக்கப்படாத நொடிப்பு நிலையரொருவராக இருப்பாராயின்; அல்லது

(c) ஒழுக்கக்கேட்டினை உள்ளடக்குகின்ற குற்றச்செயல் எதற்காகவும் குற்றவழக்கு நீதிமன்றமொன்றினால் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டவராக இருப்பாராயின், பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகள் எதனின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கோ அல்லது பெயர் குறித்து நியமிக்கப்படுவதற்கோ தகுதியுடையவராகமாட்டார்.

(2) பூசல்கள் அல்லது ஐயப்பாடுகளின் நேர்வில், ஆட்சிக் குழுவானது (1)–ஆம் உட்பிரிவின்படி நபரொருவரின் தகுதியின்மையினை தீர்மானித்தல் வேண்டும் மற்றும் அதன் முடிவு இறுதியானதாக இருத்தல் வேண்டும்.

21. (1) ஆட்சிப்பேரவையானது பதவிவழி மற்றும் பிற உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். ஆட்சிப்பேரவை.

(2) ஆட்சிப் பேரவையின் பதவிவழி உறுப்பினர்களானவர்,–

(a) வேந்தர்;

(b) இணைவேந்தர்;

(c) துணைவேந்தர்;

(d) இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதியின் ஆணையாளர்/ இயக்குநர்;

(e) மருத்துவக் கல்வி இயக்குநர்;

(f) பல்கலைக்கழக ஆய்வு மற்றும் ஆராய்ச்சித் துறைகளின் தலைவர்கள்;

(g) இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதியின் கல்லூரிகளின் புலத்தலைவர்கள் அல்லது முதல்வர்கள்;

(h) தமிழ்நாடு சித்த மருத்துவ மன்றத்தின் தலைவர்;

(i) தமிழ்நாடு இந்திய மருத்துவக் கழகத்தின் தலைவர்;

(j) தமிழ்நாடு ஓமியோபதி மருத்துவக் கழகத்தின் தலைவர்; மற்றும்

(k) பிறவாறாக ஆட்சிப்பேரவையின் உறுப்பினராக இல்லாத ஆட்சிக்குழுவின் உறுப்பினர்கள்;

***விளக்கம்.—*** (k) கூறின் விளைவாக, ஆட்சிப் பேரவையின் உறுப்பினராக இருக்கும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பொறுப்பிலுள்ள அரசுச் செயலாளர் அல்லது நிதித்துறை பொறுப்பிலுள்ள அரசுச் செயலாளர் அல்லது உயர்கல்வித் துறை பொறுப்பிலுள்ள அரசுச் செயலாளர் அல்லது சட்டத்துறை பொறுப்பிலுள்ள அரசுச் செயலாளரானவர் காரணம் எதனாலும் ஆட்சிக்குழுவின் கூட்டம் எதிலும் கலந்துகொள்ள இயலாமல் போனால், அவர் அரசு துணைச் செயலாளர் படிநிலைக்குக் குறையாத அவரது துறையின் அலுவலர் எவரையும் அத்தகைய கூட்டத்தில் பங்கு கொள்ள மாற்றியனுப்பலாம். அவ்வாறு மாற்றியனுப்பப்பட்ட அலுவலரானவர் கூட்டத்தின் விவாதங்களில் கலந்து கொள்ளும் உரிமை கொண்டிருத்தல் வேண்டும் மற்றும் வாக்கிடும் உரிமை கொண்டிருத்தல் வேண்டும்.

(3) ஆட்சிப்பேரவையின் பிற உறுப்பினர்களானவர்,—

(a) இணைக்கப்பட்ட கல்லூரி ஒவ்வொன்றின் ஆசிரியர்கள் அவர்களுக்கிடையேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பேராசிரியர் ஒருவர்;

(b) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினர்கள் அவர்களுக்கிடையேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இருவர்;

(c) இந்திய மருத்துவ முறைக்கான தேசிய ஆணையத்தின் தலைவரால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர்;

d) தேசிய ஓமியோபதி ஆணையத்தின் தலைவரால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர்;

(e) மத்திய சித்த மருத்துவ ஆராய்ச்சிக் குழும தலைமை இயக்குநரால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர்;

(f) பின்வருவன ஒவ்வொன்றின் சார்பாக, வேந்தரால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் இருத்தல் வேண்டும்,—

(i) வணிகர் கழகம்;

(ii) பொறியியல் மற்றும் தொழில்நுட்பம் உள்ளடங்கலான நிறுவனங்கள்;

(iii) சமூக அறிவியல்கள்;

(iv) பிற அறிவியல்கள்;

(v) சட்டம்; மற்றும்

(g) (i) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்; மற்றும்

(ii) விளையாட்டுகளின் பிரதிநிதித்துவத்தைப் பெறுவதற்கு தலா ஒரு உறுப்பினர் இணைவேந்தரால் நியமிக்கப்பட வேண்டும்.

22. இச்சட்டத்தின் பிற வகைமுறைகளுக்குட்பட்டு, ஆட்சிப்பேரவை பின்வரும் அதிகாரங்களையும், செயற் பணிகளையும் கொண்டிருத்தல் வேண்டும், அதாவது:– பல்கலைக்கழகத்தின் விரிவான கொள்கைகள் மற்றும் செயல்பாடுகளை ஆட்சிப்பேரவை மறு ஆய்வு செய்தல்

(a) பல்கலைக்கழகத்தின் விரிவான கொள்கைகளையும் செயல்பாடுகளையும் அவ்வப்போது மறு ஆய்வு செய்து, பல்கலைக்கழகத்தின் முன்னேற்றம், மேம்பாட்டிற்கான நடவடிக்கைகளுக்கு ஆலோசனை வழங்குதல்;

(b) ஏதாவது பொருள் குறித்து பல்கலைக்கழக வேந்தருக்கு ஆலோசனை அளிக்கக் கோரும்போது அவ்வாறு ஆலோசனை அளித்தல்;

(c) நிலை விதிகளில் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய பிற அதிகாரங்களை செலுத்துதல் மற்றும் செயற்பணிகளை ஆற்றுதல்.

23. (1) ஆட்சிப்பேரவை துணை வேந்தரால் நிர்ணயிக்கப்படும் தேதிகளில் ஆண்டு ஒவ்வொன்றிலும் குறைந்தது இருமுறையாவது கூடுதல் வேண்டும். அத்தகைய கூட்டம் ஒன்று ஆண்டுக் கூட்டமென வழங்கப்படுதல் வேண்டும். ஆட்சிப் பேரவையின் கூட்டங்கள்.

(2) ஆட்சிப்பேரவை கூட்டமொன்றுக்குத் தேவைப்படக்கூடிய கோரெண் என்பது ஆட்சிப்பேரவையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்காக இருத்தல் வேண்டும்:

வரம்புரையாக அத்தகைய கோரெண் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவிற்கு தேவையாக இருத்தல் கூடாது.

(3) துணை வேந்தர் பொருத்தமென்று தாம் கருதும் போதெல்லாம் மற்றும் ஆட்சிப்பேரவையின் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் ஐம்பது விழுக்காட்டிற்கு குறையாத உறுப்பினர்களால் கையொப்பமிட்ட எழுத்துருவிலான கோரிக்கை ஒன்றின்பேரில், ஆட்சிப்பேரவையின் சிறப்பு கூட்டமொன்றைக் கூட்டலாம்.

24. (1) வேந்தர், 57 ஆம் பிரிவின்படி முதல் துணைவேந்தர் நியமிக்கப்பட்டதற்குப் பின்பு, கூடிய விரைவில் ஆட்சிக் குழுவினை அமைத்தல் வேண்டும். ஆட்சிக்குழு.

(2) ஆட்சிக் குழுவானது, ஆட்சிக்குழுவின் தலைவராக பதவி வகிக்கும், துணை வேந்தருடன் கூடுதலாக பதவிவழி உறுப்பினர்கள் மற்றும் பிற உறுப்பினர்களை கொண்டிருத்தல் வேண்டும்.

(3) ஆட்சிக் குழுவின் பதவி வழி உறுப்பினர்களானவர்,–

(a) மருத்துவம்–மக்கள் நல்வாழ்வுத் துறையை பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்;

(b) நிதித் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்;

(c) உயர்கல்வித் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்;

(d) சட்டத் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்;

(e) இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறையின் ஆணையர் / இயக்குநர்; மற்றும்

(f) மாநில மருந்து உரிமம் வழங்கும் அலுவலர் (இந்திய மருத்துவம்).

***விளக்கம்.—*** (a), (b), (c) அல்லது (d) கூறுகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்சிக்குழுவின் பதவிவழி உறுப்பினர் எவரும், எந்தக் காரணத்திற்காகவும் ஆட்சிக்குழுவின் கூட்டம் எதிலும் பங்கேற்க முடியாவிட்டால், அரசு துணைச் செயலாளரின் படிநிலைக்கு குறையாத அவரது துறையின் அலுவலர் எவரையும் அத்தகைய கூட்டத்திற்கு பங்கேற்பதற்காக மாற்றாக அனுப்பலாம். அவ்வாறு மாற்றாக அனுப்பப்பட்ட அலுவலரானவர் கூட்டத்தின் விவாதத்தில் பங்கேற்க உரிமையுடையவராக இருத்தல் வேண்டும் மற்றும் வாக்களிப்பதற்கும் உரிமையுடையவராக இருத்தல் வேண்டும்.

(4) ஆட்சிக்குழுவின் பிற உறுப்பினர்களானவர்,—

a) இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை ஒவ்வொன்றிலும் இருந்து ஆட்சிப் பேரவையால் தேர்வு செய்யப்பட்ட உறுப்பினர் ஒருவர்;

b) பல்கலைக்கழகப் பேராசிரியர்களால் அவர்களுக்கிடையேயிருந்து தேர்வு செய்யப்பெற்ற உறுப்பினர் ஒருவர்; மற்றும்

c) துணை வேந்தரின் பரிந்துரையின் பேரில், வேந்தரால் நியமனம் செய்யப்படும் சித்த மருத்துவத்துறையில் சிறந்த கல்வியாளர்கள் இருவர்;

(5) நியமிக்கப்பட்ட மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களானவர், நியமிக்கப்பட்ட/தேர்ந்தெடுக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டுகள் கால அளவிற்கு தொடருதல் வேண்டும்.

ஆட்சிக் குழுவின் அதிகாரங்கள்.

**25.** ஆட்சிக் குழுவானது பின்வரும் அதிகாரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும், அதாவது: –

(1) நிலைவிதிகளை இயற்றுதல் மற்றும் திருத்தம் செய்தல் அல்லது அதனை நீக்கறவு செய்தல்;

(2) துணைமுறை விதிகளை இயற்றுதல் மற்றும் திருத்தம் செய்தல் அல்லது அவற்றை நீக்கறவு செய்தல்;

(3) பல்கலைக்கழகத்தின் சொத்துக்களையும் நிதியங்களையும் வைத்து வருதல், கட்டுப்பாடு செய்தல், நிருவகித்து வருதல்;

(4) ஆட்சிக்குழுவானது அது, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதியில் தான் பொருத்தமெனக் கருதுகிற கல்வி கற்கும் அத்தகைய பிரிவுகளில் கல்வி கற்பித்தலுக்கும் பயிற்சிக்கும் வகை செய்தல்;

(5) அது, தான் பொருத்தமெனக் கருதலாகும், சித்த மருத்துவம், ஆயுர்வேதா, யுனானி, யோகா & இயற்கை மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆகியவற்றில் அத்தகைய பல்துறை கற்றலில், பல்கலைக்கழகத்தில் கல்வித்துறைகளை நிறுவுதல்;

(6) இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறையில் ஆராய்ச்சி செய்வதற்கும், மேம்பாடு அடைவதற்கும் அறிவைப் பரப்புவதற்கும் வகை செய்தல்;

(7) பல்கலைக்கழகத்திற்குத் தேவைப்படும் உதவிப் பேராசிரியர் பதவிகள், இணைப் பேராசிரியர் பதவிகள், பேராசிரியர் பதவிகள், ஆசிரியர் மற்றும் பிற கற்பிக்கும் பதவிகளை ஏற்படுத்துதல்;

(8) இந்த நோக்கத்திற்காக பணியமர்த்தப்படக்கூடிய நிபுணர் குழுவின் கலந்தாலோசனையுடன், பல்கலைக்கழகத்திற்கு இணைக்கப்படும் கல்லூரிகள் அல்லது பல்கலைக்கழகத்தினால் செய்யப்படும் நிறுவனத்தின் ஒப்புதலுக்கான வரையறைகளை வகுத்துரைத்தல் மற்றும் அத்தகைய இணைப்பு அல்லது ஒப்புதலினை திரும்ப பெறுதல்;

(9) பட்டங்கள், பட்டயங்கள் மற்றும் பிற கல்விச் சிறப்புப் பட்டங்களை ஏற்படுத்துதல்;

(10) (a) நிலைவிதிகளால் வகுத்துரைக்கப்பட்ட முறையில் அதிலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்தாலன்றி கல்லூரி ஒன்றில் அல்லது பல்கலைக்கழக ஆய்வுக் கூடத்தில் அல்லது ஒப்புதலளிக்கப்பட்ட கல்லூரியொன்றில் ஒப்புதல் அளிக்கப்பட்ட குறித்தகால படிப்பொன்றை அல்லது பயிற்சியினை தொடர்ந்திருந்து, மற்றும் பல்கலைக்கழகத்தில் வகுத்துரைக்கப்பட்ட தேர்வுகளில் தேறியுள்ளவர்களுக்கு; அல்லது

(b) நிலைவிதிகளில் வகுத்துரைக்கப்பட்ட வரையறைகளின்படி ஆராய்ச்சியினை மேற்கொண்டவர்களுக்கு பட்டங்கள், பட்டயங்கள் மற்றும் பிற கல்விச் சிறப்புகளை அளித்தல்;

(11) ஆட்சிக்குழுவின் மூன்றில் இரண்டு பங்கிற்குக் குறையாத உறுப்பினர்களின் பரிந்துரையின் பேரில், கௌரவப்பட்டங்களை அல்லது பிற கௌரவ கல்விச் சிறப்புகளை அளித்தல்;

(12) ஆண்டறிக்கை, ஆண்டுக் கணக்குகள், நிதிநிலை மதிப்பீடுகள் ஆகியவற்றைப் பரிசீலனை செய்தல், அவற்றின் பின் தான் பொருத்தமெனக் கருதக்கூடிய அத்தகைய நடவடிக்கையை எடுத்தல்;

(13) பல்கலைக்கழகத்துறைகள் மற்றும் பல்கலைக்கழகத்தின் கல்லூரிகள் மற்றும் நிலைவிதிகளிலுள்ள இணைக்கப்பட்ட கல்லூரிகள் ஆகியவற்றில் ஆசிரியர்களுக்கான தகுதிகளை வகுத்துரைத்தல்;

(14) அந்த நோக்கத்திற்காக நியமிக்கப்பட்ட நிபுணர்கள் தேர்வுக் குழுவின் பரிந்துரையின் பேரில், பல்கலைக்கழக உதவிப்பேராசிரியர்கள், இணைப்பேராசிரியர்கள், பேராசிரியர்கள் மற்றும் பிற ஆசிரியர்களை நியமித்தல், அவர்களுடைய ஊதியங்களை நிர்ணயம் செய்தல். அவர்களுடைய கடமைகளையும் பணி நிபந்தனைகளையும் வரையறுத்தல் மற்றும் தற்காலிக காலியிடங்களை நிரப்புவதற்கும் வகை செய்தல்;

(15) நிர்வாக மற்றும் பிற பதவிகளின் பணி நியமன முறையினைக் குறிப்பிடும், நிலைவிதிகளை உருவாக்குதல், அவர்களுடைய கடமைகளையும் அவர்களது பணி நிபந்தனைகளை வரையறுக்கவும் தற்காலிக காலியிடங்களை நிரப்புவதற்கும் வகை செய்தல்;

(16) நிலைவிதிகளில் வகுத்துரைக்கப்பட்ட முறையில் பல்கலைக்கழகத்தின் உதவிப்பேராசிரியர்கள், இணைப்பேராசிரியர்கள், பேராசிரியர்கள் மற்றும் பிற ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோர்களுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் நிலைவிதிகளில் குறித்துரைக்கப்படலாகும் அத்தகைய தண்டத்தொகையை விதித்தல் மற்றும் விசாரணை நிலுவையிலுள்ள அவர்களை பணியிடை நீக்கம் செய்தல்;

(17) பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட அல்லது இணைக்கப்படக்கூடிய பிற நிறுவனங்கள் மற்றும் அனைத்து கல்லூரிகள், மருத்துவமனைகள் ஆகியவற்றில் ஆய்வு செய்ய ஏற்பாடு செய்தல் மற்றும் தேவையென கருதலாகும் அத்தகைய நடவடிக்கையை எடுத்தல்;

(18) கல்லூரி அல்லது நிறுவனம் ஒன்றை ஒரு தன்னாட்சி கல்லூரி அல்லது நிறுவனமாக பெயரிட்டு குறிப்பிடலாகும் மற்றும் அத்தகைய பெயரிட்டு குறிப்பிடுதலை நீக்கிவிடும் முறை மற்றும் அதற்குட்பட்ட நிபந்தனைகளை கல்வி மன்ற நிலைக்குழுவின் ஆலோசனையுடன் வகுத்துரைத்தல்;

(19) அரசின் இசைவுடன், கல்லூரி எதனையும் தன்னாட்சிக் கல்லூரியாகப் பெயரிட்டுக் குறிப்பிடல் மற்றும் அத்தகைய பெயரிட்டு குறிப்பிடுதலை ரத்து செய்தல்;

(20) பல்கலைக்கழக பரப்பிடத்திற்கு வெளியே கல்லூரி அல்லது நிறுவனம் எதனையும் அங்கீகரித்தல்;

(21) மைய அல்லது மாநில அரசு எதனிடமிருந்தும் அல்லது பொது மக்களிடமிருந்து அல்லது மைய அல்லது மாநில அரசு எதற்கேனும் சொந்தமான அல்லது அதன் கட்டுபாட்டிலுள்ள கழகம் எதனிடமிருந்தும், பல்கலைக்கழகத்தின் சார்பாக கடன்களைப் பெறுதல்;

(22) பாடக்குழுக்களின் பரிந்துரையின் பேரில் தேர்வாளர்களை நியமித்தல் மற்றும் அவர்களுடைய பரிந்துரைகளை தீர்மானித்தல்;

(23) பல்கலைக்கழகத்தின் நோக்கங்களுக்காக பல்கலைக்கழகச் சொத்தின் பிணையத்தில் பேரில், அரசின் ஒப்புதலளிப்புடன் பணத்தைக் கடன்வாங்குதல்;

(24) நிலைவிதிகளில் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய கட்டணங்களை விதித்தல், வசூலித்தல்;

(25) பாடத்திட்டக் குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமித்தல்;

(26) பல்கலைக்கழகத்திற்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்வது தொடர்பான துணைமுறை விதிகளை உருவாக்குதல் மற்றும் பல்கலைக்கழகத் தேர்வுகளுக்குச் சமமாய் இருப்பதாக ஏற்பிசைவு அளிக்கப்படுவதற்கான தேர்வுகளை குறிப்பிடுதல்;

(27) விடுதிகளை நிறுவுதல் மற்றும் பேணி வருதல்;

(28) பல்கலைக்கழகத்தால் பேணி வரப்படாத விடுதியை அங்கீகரித்தல் மற்றும் அத்தகைய விடுதி அங்கீகரிக்கப் பட்டதற்கு உட்படவேண்டிய நிபந்தனைகளுக்கிணங்கி, நடத்தப்படாத விடுதி எதனின் அங்கீகாரத்தை இடை நிறுத்தம் செய்தல் அல்லது திரும்ப பெறுதல்;

(29) பல்கலைக்கழக மாணவர்கள் தங்கும் இடத்தை கண்காணித்தல் மற்றும் அவர்களது உடல் நலம் மற்றும் நல்வாழ்வை பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்;

(30) உதவித் தொகைகள், பயண உதவித் தொகைகள், மாணவ உதவித் தொகைகள், பதக்கங்கள், பரிசுகள் ஆகியவற்றை நிலைவிதிகளுக்கிணங்கி அளித்தல்;

(31) பல்கலைக்கழகத்தால் ஏற்படுத்தப்பட்ட நூல் வெளியீட்டுப் பிரிவு, வேலைவாய்ப்பகம் மற்றும் விளையாட்டு அல்லது தடகளக் கழகங்கள் ஆகியவற்றை மேலாண்மை செய்தல்;

(32) பல்கலைக்கழகத்தில் பயிற்றுவித்தலையும் கற்பித்தலையும் மறு ஆய்வு செய்தல்;

(33) பல்கலைக்கழகத்திற்குள் ஆராய்ச்சியை வளர்த்தல், அத்தகைய ஆராய்ச்சி பற்றி அவ்வப்போது அறிக்கைகளைக் கோருதல்;

(34) தீர்மானிக்கப்பட்ட நோக்கங்ளுக்காக, பல்கலைக் கழகத்தின் பொறுப்பில் விடப்பட்டுள்ள சொத்துக்கள், நிதியங்கள் ஆகிய அனைத்தையும் நிர்வகித்தல்; மற்றும்

(35) பல்கலைக்கழகத்திடம், அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள் எவையேனும், நிலைக்கொடைகள், விருப்ப ஆவண வழிக்கொடைகள், நன்கொடைகள், மானியமளிப்புகள் மற்றும் உரிமை மாற்றங்கள் மூலமாக அளிக்கப்படும்போது அவற்றை பல்கலைக்கழகத்தின் சார்பாக, ஏற்றுக் கொள்ளுதல்.

ஆட்சிக்குழுவின் கூட்டங்கள்.

26. (1) ஆட்சிக்குழுவானது அத்தகைய நேரத்திலும் இடத்திலும் கூடுதல் வேண்டும் மற்றும் (2) மற்றும் (3)—ஆம் உட்பிரிவுகளின் வகைமுறைகளுக்குட்பட்டு, நிலைவிதிகளில் வகுத்துரைக்கப்படலாகும் கூட்டத்தின் கோரெண் உள்ளடங்கலான அதன் கூட்டங்களில் அத்தகைய நடைமுறை விதிகளினை பின்பற்றுதல் வேண்டும்.

(2) துணை வேந்தர் அல்லது அவர் வராத போது, வந்திருக்கும் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் எவரும், ஆட்சிக்குழுவின் கூட்டமொன்றுக்குத் தலைமை வகித்தல் வேண்டும்.

(3) ஆட்சிக்குழுவின் கூட்டம் எதிலும் எழும் அனைத்துக் கேள்விகளும், வந்திருந்து வாக்களிக்கின்ற உறுப்பினர்களின் வாக்குகளின் பெரும்பான்மையினால் முடிவு செய்யப்படுதல் வேண்டும் மற்றும் வாக்குகள் சமமானவையாக அமைகின்ற நேர்வில் நேர்விற்கேற்ப, துணை வேந்தரோ அல்லது தலைமை வகிக்கும் உறுப்பினரோ, இரண்டாவது அல்லது அறுதி வாக்கு ஒன்றைப் பெற்றிருத்தலும் அதை செலுத்துதலும் வேண்டும்.

(4) (a) ஆட்சிக்குழு, கலந்தாய்வு செய்யும் நோக்கத்திற்காக, பரிசீலனையில் உள்ள பொருள் எதிலும் சிறப்பு அறிவையோ அல்லது நடைமுறைப் பட்டறிவையோ பெற்றிருக்கின்ற நபர் எவரையும் கூட்டம் எதற்கும் வருகை தருமாறு அழைப்பு விடுக்கலாம். அத்தகையவர் அத்தகைய கூட்டங்களில் உரையாற்றலாம், மற்றபடி நடவடிக்கைகளில் பங்கேற்கலாம், ஆனால் வாக்களிக்கு உரிமைத் தகுதியுடையவராகமாட்டார்.

(b) அவ்வாறு அழைக்கப்பட்டவர் ஆட்சிக்குழுவின் உறுப்பினர் ஒருவருக்கு அனுமதிக்கத்தக்கதான, அத்தகைய தினப்படி மற்றும் பயணப்படிகளுக்கு உரிமைத் தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

ஊதியம் பெறுவதற்கு உறுப்பினர்கள் உரிமைத் தகுதியுடைய வராகார்.

27. ஆட்சிக்குழுவின் உறுப்பினர்கள், வகுத்துரைக்கப்படக் கூடிய அத்தகைய தினப்படி பயணப்படிகள் தவிர, பல்கலைக்கழகத்திடமிருந்து ஊதியம் எதையும் பெறுவதற்கு உரிமைத் தகுதியுடையவர்கள் ஆகமாட்டார்கள்:

வரம்புரையாக, இந்தப் பிரிவில் அடங்கியுள்ள எதுவும், உறுப்பினர் எவரையும், தாம் வகிக்கிற பதவியின் காரணமாக தாம் உரிமைத் தகுதியுடையவராயிருக்கிற தம்முடைய இயல்பான ஊதியங்களைப் பெறுவதை தடை செய்தலாகாது.

உறுப்பினர்களின் பதவி விலகல்.

28. ஆட்சிக்குழுவின் பதவிவழி உறுப்பினர் அல்லாத பிற உறுப்பினர் ஒருவர், தமது பதவி முடிவடைகிற கால அளவிற்கு முன்பு எந்தச் சமயத்திலும் தம்முடைய உறுப்பினர் பதவியை விட்டு விலகலாம். அத்தகைய பதவி விலகலானது, வேந்தருக்கு அவ்வுறுப்பினரால் எழுத்துருவிலான கடிதம் ஒன்றின் மூலமாகத் தெரிவிக்கப்படுதல் வேண்டும் மற்றும் அப்பதவி விலகலானது வேந்தரால், அது ஏற்கப்படும் தேதியிலிருந்து செயல் விளைவு பெறுதல் வேண்டும்.

நிதிக்குழு.

29. (1) நிதிக்குழு, பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும், அதாவது:—

a) துணை வேந்தர்;

b) நிதித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்;

c) மருத்துவம்—மக்கள் நல்வாழ்வுத்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச்செயலாளர்;

d) இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறையின் ஆணையர்/இயக்குநர்; மற்றும்

e) அதன் உறுப்பினர்களுக்கிடையேயிருந்து, ஆட்சிக் குழுவினால் நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள்.

(2) (1) –ஆம் உட்பிரிவின் (b) மற்றும் (c) –ஆம் கூறுகளுக்கு குறிப்பிடப்பட்ட உறுப்பினர் எவரும், எந்த காரணங்களுக்காகவும், நிதிக்குழுவின் கூட்டங்களில் கலந்துகொள்ள இயலவில்லையானால் அவர் அரசின் துணைச் செயலாளரின் படிநிலைக்குக் குறையாத தன்னுடைய துறையின் அலுவலர் எவரையும் கூட்டங்களில் கலந்து கொள்வதற்காக அனுப்பி வைக்கலாம். அவ்வாறு அனுப்பிவைக்கப்பட்ட அலுவலர் கூட்டத்தின் கலந்துரையாடலில் பங்கெடுத்துக்கொள்ளும் உரிமை கொண்டிருத்தல் வேண்டும் மற்றும் வாக்களிக்கும் உரிமை கொண்டிருத்தல் வேண்டும்.

(3) நிதிக்குழுவிற்குத் துணை வேந்தர், பதவி வழித்தலைவராகவும் நிதி அலுவலர் பதவிவழிச் செயலாளராகவும் இருத்தல் வேண்டும்.

(4) (1) ஆம் உட்பிரிவின் (e)–ஆம் கூறின் படி ஆட்சிக்குழுவினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் மூன்று ஆண்டுகள் காலத்திற்கு பதவி வகிக்க வேண்டும்.

(5) நிதி அலுவலரால் தயாரிக்கப்பட்ட பல்கலைக்கழக ஆண்டுக் கணக்குகள், பரிசீலனைக்காகவும் கருத்துரைகளுக்காகவும் நிதிக்குழுவின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும்; அதன்பின்னர் ஒப்புதலளிப்புக்காக ஆட்சிக்குழுவிற்கு அனுப்புதல் வேண்டும்.

(6) நிதி அலுவலரால் தயாரிக்கப்பட்ட பல்கலைக்கழக ஆண்டு நிதிமதிப்பீடுகளின் பரிசீலனைக்காகவும் கருத்துரைகளுக்காகவும் நிதிக்குழுவின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும். நிதிக்குழுவினால் மாற்றியமைக்கப்பட்டவாறான கூறப்பட்ட மதிப்பீடுகள், அதற்குப் பின்னர், பரிசீலனைக்காக ஆட்சிக்குழுவின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும். ஆட்சிக்குழுவானது அது பொருத்தமெனக் கருதும் அத்தகைய மாற்றத்துடன் நிதி மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளிக்கலாம்.

(7) நிதிக்குழுவானது,–

(a) கணக்குகளை ஆய்வு செய்வதற்கும் செலவினத்திற்காக கருத்துருக்களைக் கூர்ந்தாய்வு செய்வதற்குமென குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒருமுறையாவது கூடுதல் வேண்டும்;

(b) அவ்வப்போது பல்கலைக்கழகத்தின் நிதி நிலைமையை மறுஆய்வு செய்தல் வேண்டும்;

(c) ஆண்டு நிதி மதிப்பீடுகளில் வகைமுறை எதுவும் செய்யப்பட்டிராத முதலீடு அல்லது செலவினத்தை உள்ளடக்கியுள்ள அல்லது ஆண்டு நிதிமதிப்பீடுகளில் வகைசெய்யப்பட்டுள்ள தொகைக்கும் மிகையாக உள்ள செலவினத்தை உள்ளடக்குகிற, கருத்துரு ஒவ்வொன்றின் பேரிலும், ஆட்சிக்குழுவுக்குப் பரிந்துரை செய்தல் வேண்டும்;

(d) பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரிகளின் கணக்குகளை வைத்து பேணி வருவதற்கான முறைகளையும், நடைமுறைகளையும் படிவங்களையும் வகுத்துரைத்தல் வேண்டும்;

(e) பல்கலைக்கழகத்தின் நிதிகள் தொடர்பான அனைத்துப் பொருட்பாடுகளின்பேரிலும், ஆட்சிக்குழுவிற்குப் பரிந்துரை செய்தல் வேண்டும்; மற்றும்

(f) வகுத்துரைக்கப்படலாகும் பிற செயற்பணிகளைப் புரிந்துவருதல் வேண்டும்.

கல்விமன்ற நிலைக்குழு.

30. (1) இந்தச் சட்டம், நிலைவிதிகள் மற்றும் துணைமுறை விதிகள், ஒருங்கிணைத்தல் ஆகிய வகைமுறைகளுக்குட்படும் மற்றும் பல்கலைக்கழகத்தின் கல்வி அலுவல்கள் மீதான பொதுக் கண்காணிப்பை செயல்படுத்தும், பல்கலைக்கழகத்தின் ஒரு கல்விமன்ற நிலைக்குழுவானது இருத்தல் வேண்டும்.

(2) கல்விமன்ற நிலைக்குழுவானது, பின்வரும் பதவிவழி உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும், அதாவது,—

(a) துணை வேந்தர்;

(b) இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறையின் ஆணையர்/இயக்குநர்;

(c) பல்கலைக்கழக புலங்களின் தலைவர்கள்;

(d) பல்கலைக்கழக பாடத்திட்ட குழுக்களின் தலைவர்கள்; மற்றும்

(e) பல்கலைக்கழகத்தின் துறைத்தலைவர்கள்.

(3) இந்தச் சட்டம், நிலைவிதிகள், துணைமுறை விதிகளின் வகைமுறைகளுக்குட்பட்டு, கல்விமன்ற நிலைக்குழுவானது, பின்வரும் அதிகாரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும், அதாவது,—

(a) ஒழுங்குமுறை விதிகளைச் செய்தல் மற்றும் அதனைத் திருத்தம் செய்தல் அல்லது நீக்கம் செய்தல்;

(b) பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சியினை மேம்படுத்துவது தொடர்பாக ஆட்சிக்குழுவிற்கு ஆலோசனை வழங்குதல் வேண்டும்; மற்றும்

(c) கல்வி மற்றும் ஆராய்ச்சிப் படிப்புகளில் சீரமைப்பு மற்றும் புத்தாக்கத்திற்காக நடவடிக்கைகளை பரிந்துரைத்தல்.

(4) கல்விமன்ற நிலைக்குழுவானது சாதாரணமாக ஓர் ஆண்டில் இரு முறை கூடுதல் வேண்டும், இருப்பினும் குழுவானது, ஆட்சிக்குழுவால் தீர்மானிக்கலாகும் மற்ற சமயங்களில் கூடலாம்.

(5) கல்விமன்ற நிலைக்குழுவின் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள், கல்வி மன்ற நிலைக்குழுவின் ஒரு கூட்டத்திற்கு தேவையான கோரெண்ணாக இருத்தல் வேண்டும்.

(6) துணை வேந்தரானவர் கல்விமன்ற நிலைக்குழுவின் அனைத்து கூட்டங்களிலும் தலைமை வகித்தல் வேண்டும். துணை வேந்தர், காரணம் எதனினாலும் கல்விமன்ற நிலைக்குழுவின் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாத நிலையில், பல்கலைக்கழகத்தின் துறைகள் எதனின் பேராசிரியரின் படிநிலைக்கு குறையாத அலுவலர் ஒருவரை நியமிக்கலாம்.

31. (1) பல்கலைக்கழகமானது பின்வரும் புலங்களைக் கொண்டிருத்தல் வேண்டும், அதாவது : — புலங்கள்.

(a) சித்த மருத்துவப் புலம்;

(b) ஆயர்வேத மருத்துவப் புலம்;

(c) யுனானி மருத்துவப் புலம்;

(d) யோகா மற்றும் இயற்கை மருத்துவப் புலம்;

(e) ஓமியோபதிப் புலம்; மற்றும்

(f) நிலைவிதிகளினால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய பிற புலம்;

(2) புலன்களின் உருவாக்கம், செயற்பணிகள், பிற அனைத்து வகைகளிலும், ஒழுங்குமுறை விதிகளின் மூலம் வகுத்துரைக்கப்படக்கூடியனவாக இருத்தல் வேண்டும்.

(3) (2)—ஆம் உட்பிரிவில் அடங்கியிருப்பது எது எவ்வாறு இருப்பினும், கல்விமன்ற நிலைக்குழுவானது, ஆட்சிக் குழுவின் பரிந்துரையின் பேரில், பல்கலைக்கழகத்தின் ஆசிரியர் எவரையும், புலங்களின் உறுப்பினராக பணியமர்த்தம் செய்யலாம்.

திட்டமிடும் குழு.

**32.** (1) பல்கலைக்கழகத்திற்கென திட்டமிடும் குழு ஒன்று அமைக்கப்படுதல் வேண்டும்; அது பல்கலைக்கழகத்தின் திட்டமிடல் மற்றும் வளர்ச்சி குறித்து பொதுவாக ஆலோசனை நல்குதல்; மற்றும் அவ்வப்போது பல்கலைக்கழகக் கல்வித்தரம் மற்றும் ஆராய்ச்சியை ஆய்வு செய்துவருதல் வேண்டும்.

(2) திட்டக்குழுவானது பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும், அதாவது:—

(a) குழுவின் தலைமையாளராக இருக்க வேண்டிய துணை வேந்தர்;

(b) ஆட்சிக்குழுவினால் நியமிக்கப்பட்ட இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதியின் கல்வி/ஆராய்ச்சி/ மருந்துத் துறையில் உயர் நிலையில் உள்ள எட்டு நபர்களுக்கு மிகாத; மற்றும்

(c) இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறையின் ஆணையர்/இயக்குநர்.

(3) திட்டமிடும் குழுவானது, இந்தச் சட்டத்தினால் அதனிடம் உற்றமைந்துள்ள பிற அதிகாரங்கள் அனைத்துடனும், கல்வி அலுவல்கள் எதனையும் குறித்து ஆட்சிக்குழுவிற்கும், கல்விமன்றத்திற்கும் ஆலோசனை கூறுவதற்கும் உரிமை கொண்டிருத்தல் வேண்டும்.

(4) திட்டக் குழுவின் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவிக்காலமானது மூன்று ஆண்டுகளாக இருத்தல் வேண்டும் மற்றும் அவர்கள் மறு நியமனத்திற்கு தகுதியுடையவராவர்.

பாடத்திட்டக் குழுக்கள்.

**33.** (1) இந்திய மருத்துவ முறை அதாவது, சித்த மருத்துவம், ஆயுர்வேதா, யுனானி, யோகா & இயற்கை மருத்துவம் மற்றும் ஓமியோபதி மற்றும் ஆராய்ச்சிக்கான ஒரு பாடத்திட்டக்குழு ஆகிய ஒவ்வொன்றுடனும் இணைக்கப்பட்ட பாடக்குழுக்கள் இருத்தல் வேண்டும்.

(2) பாடத்திட்டக் குழுக்களின் உருவாக்கம் மற்றும் அதிகாரங்களானது வகுத்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

பிற அதிகார அமைப்புகளை அமைத்தல்.

**34.** ஆட்சிக்குழுவானது தேவைப்படலாகும் பல்கலைக் கழகத்தின் அத்தகைய பிற அதிகார அமைப்புகளை நிலைவிதிகளில் வகுத்துரைக்கப்படும் முறையில் அமைத்துருவாக்கலாம்.

அதிகார அமைப்புகள் குழுக்களை அமைத் துருவாக்கல் மற்றும் அதிகாரங்களை ஒப்படைப்பு செய்தல்.

**35.** பல்கலைக்கழகத்தின் அனைத்து அதிகார அமைப்புகளும், குழுக்களை அமைத்துருவாக்க மற்றும் பொருத்தமென கருதலாகும் அத்தகைய அதிகாரங்களை அவற்றிற்கு ஒப்படைவு செய்யவும் அதிகாரங்களை கொண்டிருத்தல் வேண்டும். அத்தகைய குழுக்கள், பிறவாறாக வழங்கப்பட்டாலன்றி, தொடர்புடைய அதிகார அமைப்பின் உறுப்பினர்களை கொண்டிருத்தல் வேண்டும்.

## அத்தியாயம்—V.

## நிலை விதிகள், துணைமுறை விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகள்.

நிலைவிதிகள்.

**36.** (1) ஆட்சிக்குழு, அவ்வப்போது, நிலைவிதிகளைச் செய்யலாம் மற்றும் அந்நிலை விதிகளைத் திருத்தலாம் அல்லது நீக்கலாம்.

(2) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்குட்பட்டு, நிலைவிதிகள், பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்குமோ அல்லது அவற்றுள் ஏதொன்றுக்குமோ, வகை செய்யலாம், அதாவது:—

(a) பட்டங்கள் மற்றும் கல்வி சிறப்புப்பட்டங்கள் வழங்குவதற்காக, பட்டமளிப்பு விழாவை நடத்துதல்;

(b) மதிப்புறு பட்டங்களையும் கல்விச் சிறப்புப் பட்டங்களையும் வழங்குதல்;

(c) பல்கலைக்கழக அதிகார அமைப்புகளின் அமைப்பு, அதிகாரங்கள் மற்றும் செயற்பணிகள்;

(d) பல்கலைக்கழக அதிகார அமைப்புகளின் உறுப்பினர்களிடையே எழும் காலியிடங்களை நிரப்புகின்ற முறை;

(e) பல்கலைக்கழக அதிகார அமைப்புகள் மற்றும் அதன் குழுக்களின் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படத்தக்க படித்தொகைகள்;

(f) அதிகார அமைப்புகளின் கூட்டங்களில் அலுவல் நடத்துவதற்கான கோரெண் உள்ளடங்களாக; அத்தகைய கூட்டங்களில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்;

(g) பல்கலைக்கழக அதிகார அமைப்புகளின் முடிவுகளின் ஆணைகளுக்கு உறுதியொப்பமளித்தல்;

(h) பல்கலைக் கழகத்தில், ஆராய்ச்சி துறைகளை உருவாக்குதல்;

(i) வேந்தர் மற்றும் இணைவேந்தர் அல்லாத பல்கலைக்கழகத்தின் பிற அலுவலர்களின் பதவிக்கால அளவு அவர்களின் நியமன முறை மற்றும் பணி நிபந்தனைகள்;

(j) கல்வி நிறுவனங்கள், அல்லது இணைக்கப்பெற்ற கல்லுாரிகள் மற்றும் பல்கலைக்கழகத்தினால் பணியமர்த்தப்படும் ஆசிரியர்கள் மற்றும் ஏனையோரின் தகுதிகள்;

(k) பல்கலைக்கழகத்தினால் பணியமர்த்தப்படும் ஆசிரியர்களையும் ஏனையோரையும் வகைப்படுத்துதல், அவர்களின் நியமனமுறை மற்றும் அவர்களின் பணி பற்றிய வரையறைகளையும் பணி நிபந்தனைகளையும் தீர்மானித்தல்;

(l) பல்கலைக்கழகத்தினால் பணியமர்த்தப்படும் அலுவலர்கள், ஆசிரியர்களையும் மற்றும் ஏனையோரின் நன்மைக்காக ஓய்வூதியம், பணிக்கொடை, காப்பீடு அல்லது வருங்கால வைப்பு நிதியத்தை ஏற்படுத்துதல்;

(m) பட்டதாரி உதவித் தொகைகள், பயண உதவித் தொகைகள், படிப்புதவித் தொகைகள், மாணவ உதவித் தொகைகள், உதவிச் சம்பளங்கள், ஆதரவுப் படிப்புத் தொகைகள், பதக்கங்கள், பரிசுகள் ஆகியவற்றை ஏற்படுத்துதலும் அவற்றை அளிப்பதற்கான நிபந்தனைகள்;

(n) பல்கலைக்கழகத்துடன் கல்லூரிகளை இணைப்புக்கான நிபந்தனைகள்;

(o) கல்லூரியொன்று தன்னாட்சிக் கல்லூரியாக பெயர் குறித்தழைக்கப்படுதலுக்கான முறை மற்றும் அதற்குட்படவேண்டிய நிபந்தனைகள் மற்றும் அத்தகைய பெயர்குறித்தலை நீக்குதலுக்கு உட்படவேண்டிய நிபந்தனைகள் மற்றும் கல்லூரியின் கல்வி விவகாரங்களின் குழு, கல்வி வாரியங்கள் மற்றும் தேர்வாளர் வாரியங்களின் உருவாக்கம் அல்லது மறு உருவாக்கம், அதிகாரங்கள் மற்றும் பணிகள் உள்ளடங்களான தன்னாட்சிக் கல்லூரியின் நிருவாகம் தொடர்பான பொருட்பாடுகள்;

(p) கூடங்கள், மாணவர் விடுதிகள், ஆய்வுக் கூடங்கள் ஆகியவற்றை நிறுவியமைத்தலும், பேணி வருதலும்;

(q) பல்கலைக்கழகத்தால் பேணி வரப்படாத விடுதிகளை அங்கீகரித்தலுக்கான நிபந்தனைகள்;

(r) கூடங்களிலும், மாணவர் விடுதிகளிலும், பல்கலைக்கழக மாணவர்கள் தங்கியிருப்பதற்கான நிபந்தனைகளும் அவ்வாறு தங்கியிருப்பதற்கான கட்டணங்களையும் பிற தொகைகளையும் விதித்தல்;

(s) பல்கலைக்கழக அதிகார அமைப்புகளிடம் அல்லது அலுவலர்களிடம் உள்ளமைந்துள்ள அதிகாரங்களை ஒப்படைவு செய்தல்; மற்றும்

(t) நிலைவிதிகளின் மூலம் வகுத்துரைக்கப்பட வேண்டுமெனக் கோரப்படுகின்ற அல்லது வகுத்துரைக்கப்படக்கூடிய பிற பொருட்பாடு எதுவும்.

(3) ஆட்சிக்குழுவினால் நிறைவேற்றப்பட்ட நிலைவிதி ஒன்று வேந்தருக்குப் பணிந்தனுப்பப்படுதல் வேண்டும். அவர் அதற்கு இசைவு அளிக்கலாம் அல்லது தாம் இசைவு அளிப்பதை மறுத்து நிறுத்தி வைக்கலாம். ஆட்சிக் குழுவினால் நிறைவேற்றப்பட்ட நிலைவிதி ஒன்று வேந்தரால் அதற்கு இசைவளிக்கப்படுகிற வரையிலும், செல்லுந்தன்மையைப் பெறாது இருத்தல் வேண்டும்.

துணைமுறை விதிகள்.

37. (1) ஆட்சிக்குழுவானது அவ்வப்போது துணைமுறை விதிகளை செய்யலாம் மற்றும் அதனை திருத்தலாம் அல்லது மாற்றியமைக்கலாம்.

(2) இந்தச் சட்ட மற்றும் நிலைவிதிகளின் வகை முறைகளுக்குட்பட்டு, துணைமுறை விதிகள், பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்கும் அல்லது அவற்றில் எதற்கேனும் வகைசெய்யலாம், அதாவது:—

(a) பல்கலைக்கழகத்திற்கும் அதனோடு இணைக்கப்பட்ட கல்லூரிகளுக்கும் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளுதல் மற்றும் பல்கலைக்கழக கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழக ஆய்வகங்களின் சேர்க்கைக்கான கட்டணங்களை விதித்தல்;

(b) பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பட்டங்கள், பட்டயங்கள் மற்றும் பிற கல்விச் சிறப்புப் பட்டங்கள் ஆகியவற்றைப் பெறுவதற்கு வழி செய்கின்ற குறித்தகாலப் படிப்புப் பிரிவுகள்;

(c) எந்த நிபந்தனைகளின்படி பல்கலைக்கழகப் பட்டங்கள், பட்டயங்கள் மற்றும் பிற கல்விச் சிறப்புப் பட்டங்கள் ஆகியவற்றைப் பெறுவதற்கு வழி செய்கின்ற குறித்த காலப் படிப்புப் பிரிவுகளுக்கு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுதல் வேண்டும் என்பதும்;

(d) பல்கலைக்கழகத்தின் தேர்வுகளை நடத்துதலும் எந்த நிபந்தனைகளின் பேரில் அத்தகைய தேர்வுகளுக்கு மாணவர்கள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பதும்;

(e) தேர்வுகளுக்கு மாணவர்களை ஏற்றுக் கொள்வது தொடர்பாக எந்த முறையில் விலக்கு அளிக்கப்படலாம் என்பதும்;

(f) தேர்வு அமைப்புகளின் மற்றும் தேர்வாளர்களின் நிபந்தனைகள் மற்றும் நியமன முறை; அவர்களுடைய கடமைகள்;

(g) பல்கலைக்கழக மாணவர்களிடையே ஒழுக்கத்தைப் பேணி வருதல்;

(h) குறித்த காலப் படிப்புப் பிரிவு, ஆராய்ச்சி, பரிசோதனை மற்றும் நடைமுறைப்பயிற்சி ஆகியவற்றிற்காகவும் பல்கலைக்கழகத்தின் பட்டங்கள், பட்டயங்கள் மற்றும் பிற சிறப்புப் பட்டங்கள் ஆகியவற்றிற்கான தேர்வுகளுக்கு விதிக்கப்பட வேண்டிய கட்டணங்கள்; மற்றும்

(i) இந்தச் சட்டத்தினாலோ அல்லது நிலைவிதிகளினாலோ, செய்யப்பட வேண்டியதாகவுள்ள அல்லது துணைமுறைவிதி ஒன்றினால் வகுத்துரைக்கப்படக்கூடிய பிற பொருட்பாடு எதுவும்.

(3) துணைமுறை விதிகளை உருவாக்குவதில், ஆட்சிக் குழுவானது—

(a) தேர்வாளர்களின் நியமனங்கள் மற்றும் கடமைகள் தொடர்பான பொருட்பாடுகளில் பாடத்திட்டக் குழுக்கள்; மற்றும்

(b) நடத்தை அல்லது தேர்வு தரநிலை தொடர்பான பொருட்பாடுகளில் கல்வி மன்ற நிலைக்குழுவினை கலந்தாலோசித்தல் வேண்டும்.

(4) ஆட்சிக்குழுவினால் செய்யப்பட்ட துணைமுறை விதிகள் அனைத்தும், ஆட்சிக்குழுவால் குறிப்பிடக்கூடிய அத்தகைய தேதியிலிருந்து செயல் விளைவு கொள்ளுதல் வேண்டும்; ஆனால் அவ்வாறு செய்யப்பட்ட துணைமுறைவிதி ஒவ்வொன்றும், அது செய்யப்பட்டதற்குப் பின்னர் கூடிய விரைவில் ஆட்சிப்பேரவைக்கு அனுப்பப்பட வேண்டும்; மற்றும் ஆட்சிப்பேரவை தனது அடுத்தக் கூட்டத்தில் அதனை பரிசீலனை செய்தல் வேண்டும்.

ஒழுங்குமுறை விதிகள்.

38. (1) கல்விமன்ற நிலைக்குழுவானது, இந்தச் சட்டம், நிலைவிதிகள் மற்றும் துணைமுறைவிதிகளுக்கிணங்க, அவற்றின் கீழ் அதற்கு குறித்தளிக்கப்பட்டுள்ள கடமைகளைச் செய்வதற்கு ஒழுங்குமுறை விதிகளை செய்யலாம்.

(2) ஒழுங்கு முறை விதிகள் அனைத்தும், கல்விமன்ற நிலைக்குழுவால் குறிக்கக்கூடிய அத்தகையத் தேதியிலிருந்து செயல்திறம் பெறும், ஆனால் அவ்வாறு செய்யப்பட்ட ஒழுங்குமுறை விதிகள் கூடியவிரைவில் அதனுடைய அடுத்துவரும் கூட்டத்தில் அதனுடைய பரிசீலனைக்காக ஆட்சிப்பேரவையிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம்—VI.

## மாணவர்களின் சேர்க்கை மற்றும் தங்குமிடம்.

பல்கலைக்கழக படிப்புப் பிரிவுகளுக்கான சேர்க்கை.

39. (1) நபரெவரும் பின்வரும் தகுதிகளை கொண்டிருந்தாலன்றி பட்டம், பட்டயம் அல்லது பிற கல்வி சிறப்புப் பட்டங்கள் எதையும் வழங்குவதற்காக பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் தேர்வு எதிலும் தோன்ற கல்லூரி அல்லது பல்கலைக்கழக ஆய்வுக்கூடம் அல்லது ஒப்புதலளிக்கப்பட்ட நிலையங்களில் படிப்புப்பிரிவு அல்லது பயிற்சியொன்றில் அனுமதிக்கப்படுதல் ஆகாது,—

(a) பல்கலைக்கழகத்தால் அதற்கென வகுத்துரைக்கப்பட்ட தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றிருத்தல்; மற்றும்

(b) பல்கலைக்கழகத்தால் வகுத்துரைக்கப்படலாகிற அத்தகைய பிற கல்வி நிபந்தனைகளை நிறைவேற்றியிருத்தல்.

(2) ஆட்சிக் குழுவானது, கல்விமன்ற நிலைக்குழுவின் பரிந்துரையின் பேரில் பல்கலைக்கழகப் பரப்பிடத்திற்கு வெளியே கல்லூரி அல்லது நிறுவனம் எவற்றிலும் இணையான படிப்பு அல்லது பயிற்சி பெற்ற நபரெவருக்கும் (1) ஆம் உட்பிரிவின் வகைமுறைகளிலிருந்து விலக்களிக்கலாம்.

(3) அத்தகைய நபர் இணையான படிப்பு அல்லது பயிற்சி முடித்துள்ளாரா என்ற கேள்விக்கு பாடத்திட்டம், பாடப்பிரிவின் உள்ளடக்கம் மற்றும் படிப்பு அல்லது பயிற்சியின் காலஅளவு ஆகியவை குறித்து கல்விமன்ற நிலைக்குழுவால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

அரசு கல்லூரிகள் மற்றும் நிறுவனங் களுக்கு விண்ணப்பத் தாரர்களின் தேர்வு மற்றும் சேர்க்கை

40. 39 ஆம் பிரிவு அல்லது இந்தச் சட்டத்தின் பிற வகைமுறைகள் எதிலும் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும்,—

(a) அரசானது, அரசுக் கல்லூரிகள் மற்றும் நிறுவனங்களில் படிப்பு அல்லது பயிற்சி பெற மற்றும் இந்தச் சட்டம் பொருந்தும் தனியார் கல்லூரிகள் மற்றும் நிறுவனங்களில் படிப்பு அல்லது பயிற்சி பெற நபர்களை அரசு ஒதுக்கீட்டின் கீழுள்ள இடங்களை பொறுத்த நேர்வில், தகுதி வாய்ந்த அதிகார அமைப்பால் நபர்களை தேர்ந்தெடுத்தல் மற்றும் சேர்த்தல் வேண்டும்; மற்றும்

(b) அரசுக் கல்லூரிகள் மற்றும் நிறுவனங்களில் படிப்பு அல்லது பயிற்சி பெற தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களின் சேர்க்கைக்காக மற்றும் இந்தச் சட்டம் பொருந்தக் கூடிய தனியார் கல்லூரிகள் மற்றும் நிறுவனங்களில் படிக்க அல்லது பயிற்சி பெறுவதற்கு, அரசு ஒதுக்கீட்டின் கீழுள்ள இடங்களினை பொறுத்த நேர்வில் அரசானது பொது அல்லது சிறப்பாணைகள், வழிகாட்டுதல்கள், முறை மற்றும் நடைமுறை மூலம் குறிப்பிடலாம்.

***விளக்கம்.—*** இந்தப் பிரிவில், சேர்க்கைக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களின் ஏற்கப்பட்ட பட்டியலிலிருந்து அரசால் நிரப்பப்படுவதற்கு, இந்தச் சட்டம் பொருந்தக் கூடிய தனியார் கல்லூரிகள் மற்றும் நிறுவனங்களில் கல்வி அல்லது பயிற்சி பெற ஒதுக்கப்பட்ட இடங்கள் என்பது “அரசு ஒதுக்கீட்டின் கீழுள்ள இடங்கள்" என்று பொருள்படும்.

பல்கலைக்கழகத் தேர்வுகளுக்கு அனுமதித்தல்.

41. (1) தேர்வு எழுதுபவர் எவரும்,—

(a) பல்கலைக்கழகக் கல்லூரி, ஆய்வுக்கூடம், இணைக்கப்பட்ட கல்லூரி அல்லது ஒப்புதலளிக்கப்பட்ட கல்லூரியொன்றின் உறுப்பினரொருவராக அவர் பதிவு செய்யப்பட்டிருந்தாலன்றி ; மற்றும்

(b) ஒழுங்குமுறை விதிகளில் வகுத்துரைக்கப்பட்டுள்ள வருகைக்கான தேவைப்பாடுகளை நிறைவு செய்திருந்தாலன்றியும், பல்கலைக்கழகத் தேர்வு எதற்கும் ஏற்றுக்கொள்ளப்படுதல் கூடாது.

(2) ஆட்சிக் குழுவானது, கல்விமன்ற நிலைக்குழுவின் பரிந்துரையின் பேரில், (1) ஆம் உட்பிரிவின் வகைமுறைகளில் பொருத்தமெனக் கருதலாகும், அத்தகைய நிபந்தனைக்குட்பட்டு விலக்கினை நபர் எவருக்கும் அளிக்கலாம்.

பல்கலைக்கழகத் தேர்வுகளுக்கான வருகைப் பதிவு குறித்த தகுதி.

42. பல்கலைக்கழகத்தினால் நடத்தப்பெற்ற, இணைக்கப்பட்ட அல்லது ஒப்புதல் அளிக்கப்பட்டதல்லாத கல்லூரி அல்லது நிறுவனம் எதிலும் கல்வி கற்பிக்கப்பட்ட வருகைப் பதிவு எதுவும், பல்கலைக்கழகத் தேர்வு எதற்கும் அனுமதிக்கப்படுவதற்கு தகுதியுடையதாக்குதல் ஆகாது.

## அத்தியாயம்—VII.

## பல்கலைக்கழக நிதியங்கள், ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள்.

பொது நிதியம்.

43. பல்கலைக்கழகம், பொது நிதியம் ஒன்றைப் பெற்றிருக்கும், அந்நிதியத்தில்,—

(a) கட்டணங்கள், மானியங்கள், நன்கொடைகள், கொடைகள் ஆகியவை எவையேனும் இருப்பின் அவற்றிலிருந்து பெறப்படும் அதன் வருமானத்தை;

(b) மைய அரசு அல்லது மாநில அரசு எதுவும் அல்லது அதிகார அமைப்பு எதுவும் அல்லது பல்கலைக்கழக மானியக் குழு அல்லது அதுபோன்ற அதிகார அமைப்பு அல்லது உள்ளாட்சி அதிகார அமைப்பு எதுவும் அல்லது மைய அரசு அல்லது மாநில அரசு எதனாலும் சொந்தமான அல்லது அதன் கட்டுப்பாட்டின் கீழுள்ள கூட்டு நிறுவனம் எதனாலும் வழங்கப்பட்ட பங்களிப்பு அல்லது மானியம் எதையும்; மற்றும்

(c) நிலைக் கொடைகளையும் பிற வரவுகளையும் வரவு வைத்தல் வேண்டும்.

பிறநிதியங்கள்.

44. பல்கலைக்கழகம் நிலைவிதிகளில் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய நிதியங்களைக் கொண்டிருக்கலாம்.

நிதியங்களை மேலாண்மை செய்தல்.

45. நிலைவிதிகளில் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய முறையில் பல்கலைக்கழக நிதியங்களும் அனைத்துப் பணங்களும் மேலாண்மை செய்யப்படுதல் வேண்டும்.

46. பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையானது ஆட்சிக் குழுவால் தயாரிக்கப்படுதல் வேண்டும், மற்றும் அது வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய தேதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ ஆட்சிப்பேரவைக்கு பணிந்தனுப்பப்படுதல் வேண்டும்; மற்றும் அது ஆட்சிப்பேரவையால் அதன் அடுத்த ஆண்டு கூட்டத்தில் பரிசீலனைச் செய்யப்படுதல் வேண்டும். ஆட்சிப்பேரவையானது அதன்பேரில் தீர்மானங்களை நிறைவேற்றலாம். அதனை ஆட்சிக்குழுவிற்குத் தெரியப்படுத்தலாம்; மற்றும் அது அதற்கிணங்கியவகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். ஆட்சிக்குழுவானது, அதனால் எடுக்கப்பட்ட நடவடிக்கையினை ஆட்சிப்பேரவைக்கு தெரிவித்தல் வேண்டும். ஆண்டு அறிக்கையின்படி ஒன்றும், அதன்பேரிலான தீர்மானம் ஏதேனும் இருப்பின் அதன்படி ஒன்றும் தகவலுக்காக அரசுக்கு பணிந்தனுப்பப்படுதல் வேண்டும். ஆண்டறிக்கை.

47. (1) ஆட்சிக்குழுவினால் சமர்ப்பிக்கப்படும் பல்கலைக்கழகத்தின் ஆண்டுக்கணக்குகள் அரசு பணிக்கக்கூடிய அத்தகைய ஆய்வுக்கும் தணிக்கைக்கும் உட்படுத்தப்படுதல் வேண்டும் மற்றும் ஆண்டுக் கணக்குகள் மற்றும் தணிக்கை அறிக்கையின் நகலொன்று அரசுக்குப் பணிந்தனுப்பப்படுதல் வேண்டும். ஆண்டுக் கணக்குகள்.

(2) ஆட்சிக்குழுவானது, அத்தகைய தணிக்கையில் எழுப்பப்பட்ட மறுப்புரைகளைத் தீர்த்து வைத்தல் வேண்டும் மற்றும் அந்தத் தணிக்கை அறிக்கையின்பேரில் அரசினால் பிறப்பிக்கப்படக்கூடிய அத்தகைய அறிவுறுத்தல்களை நிறைவேற்றுதல் வேண்டும்.

(3) கணக்குகள், தணிக்கை செய்யப்பட்டவுடன் ஆட்சிக்குழுவால் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய முறையில் வெளியிடப்படுதல் வேண்டும்; மற்றும் அதனுடைய நகல்களை ஆட்சிப்பேரவைக்கு அதன் அடுத்தக் கூட்டத்தில் வைப்பதற்காகப் பணிந்தனுப்புவதோடு அவற்றை அத்தகைய வெளியீட்டிலிருந்து மூன்று மாதத்திற்குள் அரசுக்கு பணிந்தனுப்புதல் வேண்டும்.

(4) அரசு, ஆண்டுத் தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளையும் ஆண்டு அறிக்கையும் அதன் கருத்துரைகளோடுகூட சட்டமன்றப் பேரவையின் முன்பு வைப்பதற்கு ஆவண செய்தல் வேண்டும்.

## அத்தியாயம்–VIII.

## நிறுவுதல் மற்றும் பணி நிபந்தனைகள்.

48. பல்கலைக்கழகமானது, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய பொருட்பாட்டில் இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை மேற்கொள்வதின் நோக்கத்திற்காக தேவையென கருதலாகும் அலுவலர்கள், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள், பிற ஆசிரியர்கள், நூலகர்கள் மற்றும் அத்தகைய பிற ஊழியர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப நியமனம் செய்யலாம். அலுவலர்கள் மற்றும் துறைத் தலைவர்களை நியமனம் செய்தல் முதலியன

49. இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்குட்பட்டு, பல்கலைக்கழகத்தில் பணியிலமர்த்தப்பட்டுள்ள அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்ற நபர்கள் ஆகியோரின் நியமனம், அவர்களை தெரிவு செய்வதற்கான நடைமுறை, அவர்களின் சம்பளம் மற்றும் படித் தொகைகள் மற்றும் பிற பணி நிபந்தனைகள் ஆகியன, நிலை விதிகளில் வகுத்துரைக்கப்படலாகிறவாறு இருத்தல் வேண்டும். பணி நிபந்தனைகள்.

*விளக்கம்.*– இந்த பிரிவின் நோக்கத்திற்காக, ''அலுவலர்கள்'' என்னும் சொல்லானது வேந்தரையும், இணைவேந்தரையும் உள்ளடக்குதல் கூடாது.

மையச்சட்டம் XIX/1925. 50. (1) பல்கலைக்கழகத்தால் பணியமர்த்தப்பட்டுள்ள அதன் அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் மற்ற நபர்கள், ஆகியோரின் நலனுக்காக, நிலைவிதிகளில் வகுத்துரைக்கப்படக்கூடிய முறையிலும் மற்றும் அத்தகைய நிபந்தனைகளுக்குட்பட்டும், தான் பொருத்தமெனக் கருதக்கூடிய அத்தகைய ஓய்வூதியம், பணிக்கொடை காப்பீடு, வருங்கால வைப்பு நிதியம் ஆகியவற்றை பல்கலைக்கழகம் ஏற்படுத்துதல் வேண்டும். ஓய்வூதியம், பணிக்கொடை முதலானவை.

(2) பல்கலைக்கழகம், (1)ஆம் உட்பிரிவின்படி வருங்கால வைப்பு நிதியம் ஒன்றை அவ்வாறு ஏற்படுத்தியுள்ளவிடத்து, பல்லைகக்கழகம் ஓர் உள்ளாட்சி அதிகார அமைப்பாகவும், அந்நிதியம் ஓர் அரசு வருங்கால வைப்பு நிதியமாகவும் இருந்தாற் போன்றே, 1925–ஆம் ஆண்டு வருங்கால வைப்பு நிதியங்கள் சட்டத்தின் வகைமுறைகள் அந்நிதியத்திற்குப் பொருந்துதல் வேண்டும் என்று அரசு விளம்பலாம்.

(3) பல்கலைக்கழகம், நிதிக்குழுவை கலந்தாய்வு செய்து, தான் தீர்மானிக்கலாகும் அத்தகைய முறையில் வருங்கால வைப்பு நிதியத் தொகையை முதலீடு செய்யலாம்.

துறைத் தலைவர்களின் பணி வரையறைகள் மற்றும் நிபந்தனைகள்.

51. (1) பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு துறையும் ஒரு பேராசிரியராக இருக்க வேண்டிய ஒரு தலைவரை அல்லது இயக்குநரைக் கொண்டிருக்கும் மற்றும் அவருடைய கடமைகளும் அலுவலற்பணிகளும், நியமனத்திற்கான வரையறைகளும் நிபந்தனைகளும் நிலைவிதிகளில் வகுத்துரைக்கப்பட்டபடி இருத்தல் வேண்டும்:

வரம்புரையாக, துறை எதிலும் ஒருவருக்கு மேற்பட்ட பேராசிரியர்கள் இருப்பார்களானால், அந்தத் துறையின் தலைவர், நிலை விதிகளால் வகுத்துரைக்கப்பட்ட முறையில் நியமிக்கப்படுதல் வேண்டும்:

மேலும் வரம்புரையாக, பேராசிரியர் எவரும் இல்லாத துறையொன்றில், இணைப் பேராசிரியர் அல்லது உதவிப்பேராசிரியர் அல்லது பிற ஆசிரியர் எவரும் நிலைவிதிகளில் வகுத்துரைக்கப்பட்ட முறையில் துறையின் தலைவராக நியமிக்கப்படலாம்.

(2) துறைத் தலைவராக நியமிக்கப்பட முன்வந்ததை ஏற்க மறுத்துவிடுவதற்கு பேராசிரியர் அல்லது இணைப் பேராசிரியர் அல்லது உதவிப் பேராசிரியரருக்கு உரிமை உண்டு.

(3) துறைத் தலைவராக நியமிக்கப்பட்ட ஒருவர், மூன்றாண்டுக் கால அளவிற்கு அத்தகையவராகப் பதவி வகித்தல் வேண்டும் மற்றும் மீண்டும் நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராவார்.

(4) துறைத் தலைவரொருவர், தம்முடைய பதவிக்கால அளவின்போது, எந்த நேரத்திலும் தம்முடைய பதவியை விட்டு விலகலாம்.

(5) துறைத் தலைவரொருவர், நிலை விதிகளால் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய பணிகளை ஆற்றுதல் மற்றும் கடமைகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

ஒருங்கிணைப் பாளரின் பணி நிபந்தனைகள் மற்றும் வரையறைகள்.

52. (1) பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் மற்றும் துறைத் தலைவர்களுக்கிடையே தொடர்புறவு அலுவலராக செயல்படும் பல்கலைக்கழகத்தின் ஒருங்கிணைப்பாளர் ஒருவர் இருத்தல் வேண்டும். அவர், நிலைவிதிகளில் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய பணிகளை ஆற்றுதல் மற்றும் கடமைகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

(2) பல்கலைக்கழகத்தில் மாணவர்களின் நலன் மற்றும் அவர்களுக்கிடையேயான ஒழுக்கம் ஆகியவற்றை பொறுப்பில் கொண்டுள்ள மாணவர் தலைவர் ஒருவர் இருத்தல் வேண்டும். அவர், நிலைவிதிகளில் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய பணிகளை ஆற்றுதல் மற்றும் கடமைகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

ஆட்சிப்பேரவை மற்றும் ஆட்சிக் குழுவின் உறுப்பினர்களின் பதவிக்காலம்.

53. (1) ஆட்சிப்பேரவை மற்றும் ஆட்சிக்குழுவின் தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் நியமனஞ்செய்யப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும் மூன்று ஆண்டுகள் காலஅளவிற்கு பதவி வகித்தல் வேண்டும் மற்றும் அத்தகைய உறுப்பினரானவர் மற்றுமொரு மூன்று ஆண்டுகள் காலஅளவிற்கு தேர்ந்தெடுக்கப்பட அல்லது நியமனஞ்செய்யப்பட தகுதியுடையவராயிருத்தல் வேண்டும்:

வரம்புரையாக, ஆட்சிப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினரொருவர், அவர், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராக அற்றுப்போகும் நாளிலிருந்து ஆட்சிப் பேரவையின் உறுப்பினராக இருத்தல் அற்றுப்போதல் வேண்டும்:

(2) (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட அதிகார அமைப்புகள் ஏதேனும் ஒன்றில் தொடர்ந்து ஒவ்வொன்றிலும் மூன்று ஆண்டுகளாக இரண்டு கால முறையை நிறைவு செய்துள்ள நபரெவரும், அத்தகைய உறுப்பினராக இருத்தல் அற்றுப்போகும் தேதியிலிருந்து மூன்றாண்டுகள் காலஅளவானது முடிவடைந்த பின்பு, மேலுமொரு மூன்று ஆண்டுகள் காலஅளவிற்கு தேர்ந்தெடுக்கப்பட அல்லது நியமனஞ் செய்யப்பட தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

*விளக்கம்,—* இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக, (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட அதிகார அமைப்புகள் ஏதொன்றிலும் ஓராண்டிற்கு குறையாத காலஅளவிற்கு தற்செயல் காலியிடத்தில் பதவி வகித்துள்ள நபரொருவர், அந்த அதிகார அமைப்பில் மூன்று ஆண்டுகள் காலஅளவிற்கு பதவி வகித்துள்ளதாக கொள்ளப்படுதல் வேண்டும்.

(3) அதிகார அமைப்பு எதனின் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமனஞ்செய்யப்பட்ட நபரொருவர் தற்காலிகமாக பதவி எதிலும் அமர்த்தப்படும், அதன் விளைவாக பிற அதிகார அமைப்பு எதிலும் பதவி வழி உறுப்பினராக உரிமையுடைவராக இருக்குமிடத்து, அவர் பதவி ஏற்றுக்கொண்ட தேதியிலிருந்து ஏழு நாட்களுக்குள், அவர் கையெழுத்திட்டு துணை வேந்தருக்கு தெரிவிக்கப்பட்ட எழுத்துவடிவிலான அறிவிக்கையின் மூலம், அவரது தேர்தல் அல்லது நியமனத்தின் விளைவாக, அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமனஞ்செய்யப்பட்ட அதிகார அமைப்பின் உறுப்பினராக அவர் தொடர்ந்து செயல்படுவாரா அல்லது அத்தகைய உறுப்பினர் பதவியிலிருந்து அவர் விலகி மற்றும் அவரது பணியமர்த்தத்தின் விளைவான பிற அதிகார அமைப்பு எதனின் பதவி வழி உறுப்பினராக செயல்படுவாரா என்று தேர்வு செய்தல் வேண்டும் மற்றும் அந்த தேர்வானது இறுதியானதாக இருத்தல் வேண்டும். அத்தகையத் தேர்வினை செய்ய தவறுகையில், அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமனஞ்செய்யப்பட்ட உறுப்பினர் பதவியிலிருந்து விலகியதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(4) அதிகார அமைப்பு எதிலும், நபரொருவர் உறுப்பினராக இருக்கிறவிடத்து மற்றும் அத்தகைய உறுப்பினர்த் தகுதியின் விளைவாக, அவர் பிற அதிகார அமைப்பு அல்லது அமைப்புகளின் உறுப்பினராயிருக்கிறவிடத்து மற்றும் காரணம் எதற்காகவும் அவர் முதலில் குறிப்பிடப்பட்ட அதிகார அமைப்பின் உறுப்பினராயிருத்தல் அற்றுப்போனால், அவர், மேலும் பிற அதிகார அமைப்பு அல்லது அமைப்புகளின் உறுப்பினராக இருத்தலும் அற்றுப்போதல் வேண்டும்.

(5) (1) ஆம் உட்பிரிவில் உள்ளடங்கிய எதுவும்,—

(i) 21 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட பதவிவழி உறுப்பினர்கள் தொடர்பாக பொருந்தாது போதல் வேண்டும், ஆனால் (k) கூறில் குறிப்பிடப்பட்ட ஆட்சிப்பேரவையின் பிறவாறாக உறுப்பினர்களாக இல்லாத ஆட்சிக்குழுவின் உறுப்பினர்களை உள்ளடக்காது; மற்றும்

(ii) 24 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட பதவிவழி உறுப்பினர்கள் தொடர்பாக பொருந்தாது போதல் வேண்டும்.

54. (1) பல்கலைக்கழகத்தின் உதவிப் பேராசிரியர், இணைப் பேராசிரியர், பேராசிரியர், நூலகர் மற்றும் இதர ஆசிரியர் பதவிகளுக்கு நியமனஞ்செய்வதற்காக ஆட்சிக் குழுவிற்குப் பரிந்துரைகளைச் செய்வதற்காகத் தெரிவுக் குழுக்கள் இருத்தல் வேண்டும். தெரிவுக் குழுக்கள்.

(2) (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளின் நியமனத்திற்காக தேர்வுக் குழுவானது, துணை வேந்தர், தொடர்புடைய கல்விக்குழுவின் தலைவர் மற்றும் இரண்டு நபர்களுக்கு குறையாத ஆனால் நான்கு நபர்களுக்கு மிகாது, நியமிக்கப்பட வேண்டிய பாடத்தில் நிபுணத்துவம் பெற்றவர்கள் ஆட்சிக் குழுவால் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

வரம்புரையாக, குறைந்தது இரண்டு நிபுணர்களாவது தேர்வுக் குழுவின் கூட்டத்தின் போது கலந்து கொள்ளுதல் வேண்டும்:

மேலும் வரம்புரையாக, உதவிப் பேராசிரியர் மற்றும் இணைப் பேராசிரியர், நியமனத்திற்கான தேர்வினை பொறுத்த நேர்வில், நிபுணர்களில் ஒருவர் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் மற்றும் பாட துறையின் தலைவர் இவர்களில் ஒருவராக இருத்தல் வேண்டும்.

**அத்தியாயம்–IX.**

**கல்லூரிகளை மாற்றுதல்.**

ஒரு சில கல்லூரிகளை பல்கலைக் கழகத்திற்கு மாற்றுதல்.

**55.** (1) 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி. ஆர் மருத்துவக் பல்கலைக்கழக சட்டத்தின்படி (இதன்பின்பு, 1987 ஆம் ஆண்டுச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) செய்யப்பட்ட, நிலைவிதிகள், துணைமுறைவிதிகள் ஒழுங்குமுறை விதிகள் மற்றும் ஆணைகள் ஆகியவற்றில் என்ன அடங்கியிருந்த போதிலும் குறிக்கப்பட்ட தேதியன்றும் அதுமுதற்கொண்டும், பல்கலைக்கழக பரப்பிடத்தில் உள்ள கல்லூரிகள் அத்தகைய தேதிக்கு முன்னதாக உள்ள குறிக்கப்பட்ட தேதியன்று 1987 ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவ பல்கலைக்கழகத்திலிருந்து இணைக்கப்படாதிருத்தல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 37/1987.

(2) தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவ பல்கலைக்கழகத்தில் சித்த மருத்துவம், ஆயுர்வேதா, யுனானி, யோகா & இயற்கை மருத்துவம் மற்றும் ஓமியோபதி போன்ற துறைகளுக்கு சொந்தமான அல்லது அவற்றிற்கு ஒப்படைக்கப்பட்ட அல்லது அவை கொண்டுள்ள நிலம், கட்டடங்கள், உபகரணங்கள், ஆய்வகங்கள் மற்றும் நூலகங்கள் மற்றும் எந்த வகையான அனைத்து உரிமை உள்ளடங்களாக அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் அனைத்தும் நியமிக்கப்பட்ட நாளிலிருந்து அது முதற்கொண்டும் மேற்சொன்ன நியமிக்கப்பட்ட நாளுக்கு முன்னர் உடனடியாக கூறப்பட்ட துறைகளுக்கு தொடர்புடைய அந்தப் பல்கலைக்கழகத்திற்கு எதிராக சட்டப்பூர்வமாக நிர்வகித்தும் மற்றும் பல்கலைக்கழகத்திற்கு நிலையாக மாற்றப்பட்டும் அதன் பொறுப்பில் இருத்தல் வேண்டும்.

(3) அரசு, குறிக்கப்பட்ட தேதிக்குப் பின்னர் எந்நேரத்திலும், தாம் பொருத்தமெனக் கருதக்கூடிய அத்தகைய வரையறைகள் மற்றும் நிபந்தனைகளின் பேரில், அதன் பயன்பாட்டிற்காக உள்ள தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவ பல்கலைக்கழக நிலங்கள் எதனையும் பல்கலைக்கழகத்திற்கு மாற்றலாம்.

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவ பல்கலைக் கழகத்தின் குறித்த சில பணியாளர் களின் பணியை இப்பல்கலைக் கழகத்திற்கு மாற்றுதல்.

**56.** (1) நியமிக்கப்பட்ட தேதிக்கு முன்பு சித்த மருத்துவம், ஆயுர்வேதா, யுனானி, யோகா & இயற்கை மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறையிலான மருத்துவம் குறித்து தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி. ஆர் மருத்துவ பல்கலைக்கழகத்தில், பல்கலைக்கழக அலுவல் தொடர்பாகப் பணியாற்றி வருகின்ற ஒவ்வொரு ஆசிரியரும், கூறப்பட்ட தேதியிலிருந்து அவர் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவ பல்கலைக்கழக பணியாளராய் இருத்தல் அற்றுப் போதல் வேண்டும் மற்றும் இப்பல்கலைக்கழகத்தின் பணியாளரொருவராகுதல் வேண்டும்.

(2) (*a*) நியமிக்கப்பட்ட தேதிக்குப் பின்பு கூடிய விரைவில் அரசு, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி. ஆர் மருத்துவ பல்கலைக்கழக மற்றும் பல்கலைக்கழக துணை வேந்தர்களுடன் கலந்தறிந்த பின்பு, பொது அல்லது சிறப்பு ஆணையின் மூலம், அத்தகைய ஆணையில் குறித்துரைக்கப்படும், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவ பல்கலைக்கழகத்தின் அத்தகைய பணியாளர்கள், அவ்வாணையில் குறித்துரைக்கப்படலாகும் அத்தேதியினின்றும் அது முதற்கொண்டும், பல்கலைக்கழகத்தின் அலுவலர் தொடர்பாகப் பணியாற்றுவதற்கு ஒதுக்கியளிக்கப்பட்டவராகுதல் வேண்டும்:

வரம்புரையாக, அத்தகைய பணிப்பாணை எதுவும், அத்தகைய பணியாளர் எவரையும் பொறுத்து, அத்தகைய ஒதுக்கீட்டிற்கு அவருடைய இசைவில்லாமல் பிறப்பிக்கப்படுதல் ஆகாது.

(b) (a)–கூறின் படியான ஆணையில் குறிப்பிடப்படும் தேதியிலும், அது முதற்கொண்டும், அத்தகைய ஆணையில் குறித்துரைக்கப்படுபவர்கள் பல்கலைக்கழகத்தின் பணியாளர்களாக ஆகுதல் வேண்டும் மற்றும் அவர்கள் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி. ஆர் மருத்துவ பல்கலைக்கழகத்தின் பணியாளர்களாய் இருத்தல் அற்றுப்போதல் வேண்டும்.

(3) (1) ஆம் உட்பிரிவு அல்லது (2)–ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்படும் நபர் ஒவ்வொருவரும், இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டிராதது போன்ற நியமிக்கப்பட்ட தேதியன்று அல்லது நேர்விற்கேற்ப (2) ஆம் உட்பிரிவின் படியான ஆணையில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று அவர் பெற்றிருக்கக்கூடிய அதே பதவிக்கால அளவு, அதே ஊதியம், மற்றும் அதே வரையறைகள் மற்றும் நிபந்தனைகள் பேரிலும், ஓய்வூதியம் அல்லது பணிக்கொடை என்று ஏதேனுமிருப்பின் அது மற்றும் பிற பொருட்பாடுகள் குறித்து அதே உரிமைகள் மற்றும் சிறப்புரிமைகளுடனும் பல்கலைக்கழகத்தின் கீழ் பதவி வகித்து வருவார்.

(4) (1) மற்றும் (2) –ஆம் உட்பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட நபர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை ஆகியவற்றை வழங்குவதற்கான கடப்பாடானது, பல்கலைக்கழகத்தின் கடப்பாடாக இருத்தல் வேண்டும்.

## அத்தியாயம்–X.

## மாறுதல்கால வகைமுறைகள்.

முதல் துணை வேந்தரின் நியமனம்.

57. 11 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் என்ன அடங்கியிருந்த போதிலும் இந்தச் சட்டமானது ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் தேதியில் இருந்து மூன்று திங்களுக்குள்ளாக, முதல் துணை வேந்தரானவர் அரசினால் மூன்றாண்டுகளுக்கு மேற்படாததொரு காலஅளவிற்கு அதனால் நிர்ணயிக்கப்படும் சம்பளத்தின் பேரிலும் அது பொருத்தமெனக் கருதலாகும் அத்தகைய பிற நிபந்தனைகளின் பேரிலும் நியமிக்கப்படுவார்:

வரம்புரையாக, முதல் துணை வேந்தராக நியமிக்கப்பட்டவர், அவருடைய பதவிக் காலத்தின்போது எழுபது வயதை நிறைவுசெய்வாரானால், பதவியிலிருந்து ஓய்வு பெறுவார்.

முதல் பதிவாளரின் நியமனம்.

58. 13 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் என்ன அடங்கியிருந்தபோதிலும், இந்தச் சட்டமானது ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் தேதியிலிருந்து மூன்று திங்களுக்குள்ளாக, முதல் பதிவாளரானவர், அரசினால் மூன்றாண்டுகளுக்கு மேற்படாததொரு கால அளவிற்கும் அதனால் நிர்ணயிக்கப்படும் சம்பளத்தின் பேரிலும் மற்றும் அது பொருத்தமெனக் கருதலாகும் அத்தகைய பிற நிபந்தனைகளின் பேரிலும் நியமிக்கப்படுவார்.

வரம்புரையாக, முதல் பதிவாளராக நியமிக்கப்பட்டவர், அவருடைய பதவி காலத்தின்போது அறுபது வயதை நிறைவுசெய்வாரானால், பதவியிலிருந்து ஓய்வு பெறுவார்.

முதல் துணை வேந்தரின் மாறுதல் கால அதிகாரங்கள்.

59. (1) நியமனம் செய்யப்பட்ட தேதிக்கு பின்பு ஆறு திங்களுக்குள் அல்லது அறிவிக்கையின் மூலம் அரசு குறித்துரைக்க கூடிய ஓராண்டுக்கு மேற்படாத அத்தகைய அதிகமான கால அளவிற்குள், ஆட்சிப்பேரவை, ஆட்சிக்குழு, கல்வி மன்ற நிலைக்குழு மற்றும் பல்கலைக்கழகத்தின் பிற அதிகார அமைப்புகளையும் அமைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டியது முதல் துணை வேந்தரின் கடமையாகும்.

(2) முதல் துணை வேந்தர் அரசைக் கலந்தறிந்து, பல்கலைக்கழகம் செயற்படுவதற்கு தேவைப்படலாகும் அத்தகைய விதிகளைச் செய்தல் வேண்டும்.

(3) (1) ஆம் உட்பிரிவின்படி அமைத்து உருவாக்கப்பட்ட அதிகார அமைப்புகள், அரசு இதன்பொருட்டு அறிவிக்கையின் மூலம் குறித்துரைக்கக் கூடிய தேதியில் அவற்றின் செயற்பணிகளைச் செலுத்தத் தொடங்குதல் வேண்டும்.

(4) தேவைப்படலாகும் நிலைவிதிகள் துணைமுறை விதிகள், ஒழுங்குமுறை விதிகள் ஆகியவற்றை வரைந்து அவற்றை முடிவு செய்வதற்காக, அவை பற்றி நடவடிக்கை எடுக்கத் தகுதி வாய்ந்த தொடர்புடைய அதிகார அமைப்புகளுக்கு அவற்றைப் பணிந்தனுப்ப வேண்டியது முதல் துணை வேந்தரின் கடமையாகும்.

அத்தகைய நிலைவிதிகள், துணை முறை விதிகள், ஒழுங்குமுறை விதிகள் ஆகியவை, உருவாக்கப்பட்டவுடன் **தமிழ்நாடு அரசிதழில்** வெளியிடப்படுதல் வேண்டும்.

(5) இந்தச் சட்டத்திலும் நிலைவிதிகளிலும், என்ன அடங்கியிருந்த போதிலும், மற்றும் அதிகார அமைப்பு ஒன்று உரியவாறு அமைக்கப்படும் காலம் வரையிலும், முதல் துணை வேந்தர், இந்தச் சட்டம் மற்றும் நிலைவிதிகளின்படி அத்தகைய அதிகார அமைப்பின் அதிகாரங்கள் மற்றும் கடமைகளில் எதனையும் செலுத்தி வருவதற்கும் புரிந்து வருவதற்கும் தற்காலிகமாக அலுவலர் எவரையும் நியமிக்கலாம் அல்லது குழு எதையும் அமைத்துருவாக்கலாம்.

தொடர்ச்சியான காலிப் பணியிடங்களை நிரப்புதல்.

60. அதிகார அமைப்பு அல்லது பல்கலைக்கழகத்தின் பிற அமைப்பு எவற்றாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கிடையே காலப்போக்கில் காலியிடம் எதுவும் எழுமானால், அத்தகைய காலியிடங்கள் துணை வேந்தரால் தீர்மானிக்கப்படலாகும் தேர்தல் மூலம் நிரப்பப்படுதல் வேண்டும்:

வரம்புரையாக, காலியிடம் ஏற்படும் தேதியிலிருந்து இரண்டு மாதங்களுக்கு முன்னதாக அத்தகைய தேர்தலானது நடத்தப்படக்கூடாது.

## அத்தியாயம்—XI.

## பல்வகைப்பட்டவை.

தற்செயல் காலியிடங்களை நிரப்புதல்.

61. பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்பு எதனின் அல்லது பிற அமைப்பு எதனின் (பதவி வழி உறுப்பினர்களல்லாத) உறுப்பினர்களுக்கிடையேயும் எழும் தற்செயல் காலியிடங்கள் அனைத்தும், எந்த உறுப்பினருடைய பதவியிடம் காலியாகியுள்ளதோ அந்த உறுப்பினரைப் பெயர் குறித்து நியமனம் செய்த அல்லது தேர்ந்தெடுத்த நபரால் அல்லது அமைப்பினால் வசதிக்கேற்றபடி கூடிய விரைவில் நிரப்பப்படுதல் வேண்டும் மற்றும் தற்செயல் காலியிடமொன்றுக்கு பெயர் குறித்து நியமிக்கப்பட்டவர் அல்லது தேர்ந்தெடுக்கப்பட்டவர் எவருடைய பதவியிடத்தை அவர் நிரப்புகிறாரோ அவர் ஓர் உறுப்பினராக இருந்திருக்கக்கூடிய காலஅளவின் எஞ்சிய பகுதிக்கு அத்தகைய அதிகார அமைப்பு அல்லது அமைப்பின் உறுப்பினராக இருந்து வருதல் வேண்டும்:

வரம்புரையாக, பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்பு எதனின் அல்லது பிற அமைப்பு எதனின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கிடையேயும் காலக்கழிவினால் எழுகின்ற காலியிடங்கள் அந்தக் காலியிடங்கள் ஏற்படும் தேதியிலிருந்து இரண்டு மாதங்களுக்கு முந்தியதல்லாத, துணைவேந்தர் நடத்த பொருத்தமென கருதும் அத்தகைய நாட்களில் நடைபெற வேண்டுமென்று அவரால் தீர்மானிக்கப்படக்கூடிய தேர்தல்கள் மூலம் நிரப்பப்படலாம்:

மேலும் வரம்புரையாக, தற்செயல் காலியிடம் எதுவும் பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்பு எதனின் அல்லது பிற அமைப்பு எதனின் உறுப்பினரின் பதவிக் காலம் முடிவடையும் தேதிக்குமுன், ஆறு மாதங்களுக்குள்ளாக அத்தகைய காலியிடம் ஏற்படுமானால், நிரப்பப்படுதலாகாது.

பல்கலைக் கழகத்தின் அதிகார அமைப்புகளின் மற்றும் பிற அமைப்புகள் நடவடிக்கைகள் காலியிடங்கள் காரணமாகச் செல்லாதவையாக ஆக்கப்படுதல் ஆகாது.

62. பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்பு எதனின் அல்லது பிற அமைப்பு எதனின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் காலியிடம் ஏதேனும் இருக்கின்ற காரணத்தால் அல்லது பல்கலைக்கழக அதிகார அமைப்பு எதனின் அல்லது பிற அமைப்பு எதனின் உறுப்பினர் ஒருவரின் தேர்தலில் அல்லது நியமனத்தில் குறைபாடு அல்லது முறைகேடு ஏதேனும் உள்ள காரணத்தால் அல்லது நேர்வுக்கான தகுதிகளை ஊறுபடுத்தாத அத்தகைய செயல் அல்லது நடவடிக்கையில், குறைபாடு அல்லது முறைகேடு ஏதேனும் உள்ள காரணத்தால் அல்லது பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்பு அல்லது பிற அமைப்பானது இந்தச் சட்டம் கோருகிறவாறு அத்தகைய இடைவெளிகளில் கூடவில்லை என்னும் காரணத்தால் மட்டுமே செல்லாததாக ஆக்கப்படுதலாகாது.

பல்கலைக்கழக உறுப்பினர் பதவி நீக்கல்.

63. (1) ஆட்சிக் குழுவானது, ஆட்சிக் குழுவின் மொத்த உறுப்பினர்களின் பெரும்பான்மையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மூலம் பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்பு எதனின் உறுப்பினர் பதவியிலிருந்து நபரெவரையும் நீக்கலாம். அத்தகைய நபர் ஆட்சிக் குழுவின் கருத்தின்படி, ஒழுக்கக்கேட்டை உள்ளடக்கியதாகவுள்ள ஒரு குற்றச் செயலுக்காக குற்றவியல் வழக்கு நீதிமன்றமொன்றினால் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டிருப்பாரானால், அல்லது கடுந்தவறான நடத்தை இழைத்த குற்றவாளியாக இருப்பாரானால், ஆட்சிக் குழுவின் மொத்த உறுப்பினர்களின் கூட்டத்திற்கு வருகை தந்து வாக்களிக்கும் ஆட்சிக்குழு உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறைந்ததல்லாத பெரும்பான்மையாராலும் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்தின் மூலமாகவும் இதன் பொருட்டுப் பிறப்பிக்கப்பட்ட எழுத்துருவிலான ஆணை ஒன்றின் மூலம் அத்தகைய நபரை, பல்கலைக்கழக அதிகார அமைப்பு எதனின் உறுப்பினர் பதவியிலிருந்தும் நீக்கம் செய்யலாம் மற்றும் அதே காரணத்திற்காக, பல்கலைக்கழகத்தால் அந்த நபருக்கு அளிக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட பட்டம் அல்லது பட்டயம் எதனையும் திரும்பப் பெறலாம்.

(2) நபர் எவரும், மனச் சீர்கேடுற்றவராகவோ அல்லது நொடித்த நிலையராக நீதித் தீர்ப்பு பெறுவதற்கு விண்ணப்பித்து இருந்தால் அல்லது நொடித்த நிலையராக நீதித் தீர்ப்பு அளிக்கப் பெற்றிருந்தால், இதன் பொருட்டுப் பிறப்பிக்கப்பட்ட எழுத்துருவிலான ஆணையொன்றின் மூலம் ஆட்சிக் குழுவானது, பல்கலைக்கழக அதிகார அமைப்பு எதனின் உறுப்பினர் பதவியிலிருந்தும் அவரை நீக்கம் செய்யலாம்.

(3) நபரொருவரின் மீதும் எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கைக்கு எதிராகக் காரணங்காட்டுவதற்கு, அவருக்கு நியாயமான வாய்ப்பொன்று கொடுக்கப்பட்டிருந்தாலன்றி இந்தப் பிரிவின்படி நடவடிக்கை எதுவும் எடுக்கப்படுதல் கூடாது.

(4) (1) ஆம் உட்பிரிவு அல்லது நேர்விற்கேற்ப (2) ஆம் உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒவ்வொன்றின் படி ஒன்றினை, அது அவ்வாறு பிறப்பிக்கப்பட்ட பின்னர், கூடிய விரைவில், ஒழுங்குமுறை விதிகளால் வகுத்துரைக்கப்பட்ட முறையில் தொடர்புடைய நபருக்குத் தெரிவிக்கப்படுதல் வேண்டும்.

பல்கலைக்கழக அதிகார அமைப்பு களையும் பிற அமைப்புகளையும் அமைத்துரு வாக்குதல் பற்றிய தகராறுகள்.

64. பல்கலைக்கழக அதிகார அமைப்பு எதனின் அல்லது பல்கலைக்கழக பிற அமைப்பு எதனின் உறுப்பினர் ஒருவராக எவரேனும் உரியவாறு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரா அல்லது பெயர் குறித்து நியமனம் செய்யப்பட்டுள்ளாரா அல்லது உறுப்பினராயிருப்பதற்குத் தகுதி உடையவராயிருக்கின்றாரா என்பது குறித்து வினா ஏதேனும் எழுமானால், அவ்வினா, வேந்தருக்குக் குறித்தனுப்பப்படுதல் வேண்டும். அதன் மீதான அவருடைய முடிவே இறுதியானதாகும்.

தகவல் பெறுவதற்கான அதிகாரம்.

65. இந்தச் சட்டத்தில் அப்போதைக்கு நடைமுறையிலுள்ள பிற சட்டம் எதிலும் என்ன அடங்கியிருந்தபோதிலும், அரசு, எழுத்துருவிலான ஆணையின் மூலமாக பல்கலைக்கழகத்திடமிருந்து அல்லது பல்கலைக்கழக அலுவல்கள் தொடர்பான பொருட்பாடு எதையும் பற்றி தகவல் எதையும் கேட்டுப் பெறலாம், மற்றும் பல்கலைக்கழகம் அத்தகைய தகவல் தன்னிடம் இருக்குமானால், அத்தகைய தகவலை நியாயமானதொரு காலஅளவுக்குள் அரசுக்கு அளித்தல் வேண்டும்:

வரம்புரையாக பல்கலைக்கழகம் கமுக்கமானதெனக் கருதுகிற தகவலைப் பொறுத்தவரையில், பல்கலைக்கழகமானது அதை வேந்தர் மற்றும் இணைவேந்தர் ஆகியோர் முன்பு வைக்கலாம்.

வருங்கால வைப்பு நிதியம் மற்றும் அது போன்ற நிதியங்களில் சேர்ந்துள்ள தொகைகளை மாற்றுதல்

66. (1) குறிக்கப்பட்ட நாளன்று 56 ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களின் மற்றும் 56 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (a) கூறின்படி ஆணையில் குறித்துரைக்கப்பட்ட நாளன்று அந்தப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களின் வருங்கால வைப்பு நிதியக் கணக்குகளின் வரவு இருப்பில் உள்ள தொகைகள், இப்பல்கலைக்கழகத்திற்கு மாற்றப்படுதல் வேண்டும் மற்றும் மேற்சொன்ன வருங்கால வைப்பு நிதியக் கணக்குகளைப் பொறுத்த கடப்பாடானது, இப்பல்கலைக்கழகத்தின் கடப்பாடாக இருக்க வேண்டும்.

(2) தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி. ஆர் மருத்துவக் பல்கலைக்கழக வயது முதிர்வு ஓய்வு நிதியம் மற்றும் அதே போன்ற பிற நிதியங்கள் எவையேனுமிருப்பின் அவற்றில் சேர்ந்துள்ள தொகைகளிலிருந்து, 56 ஆம் பிரிவின் (1) மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட நபர்களின் சார்பாக வயது முதிர்வு ஓய்வு நிதியம் அல்லது அதுபோன்ற பிற நிதியங்கள் எவையேனுமிருப்பின், அவற்றில் வரவு வைக்கப்பட்டிருக்கின்ற அத்தகைய தொகைகளை பல்கலைக்கழகத்திற்கு செலுத்துதல் வேண்டும். அவ்வாறு வழங்கப்பட்ட தொகையானது பல்கலைக்கழகத்தால் அதன் பணியாளர்களின் நலனுக்காக நிறுவப்படக்கூடிய வயது முதிர்வு ஓய்வு நிதியம் அல்லது அதுபோன்ற பிற நிதியங்கள் எவையேனுமிருப்பின் அவற்றின் பகுதியாக அமைந்திருத்தல் வேண்டும்.

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி. ஆர் மருத்துவக் பல்கலைக் கழகத்தினால் சில குறிப்பிட்ட தொகை வழங்கப்படுதல்.

67. (1) தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகமானது குறிக்கப்பட்ட நாளில் உள்ள தனது நிதியங்களிலிருந்து தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகத்துடன் கலந்தறிந்து, அரசு குறித்துரைக்கக்கூடிய தொகையினை, பல்கலைக்கழகத்திற்கு செலுத்துதல் வேண்டும்.

(2) (1) ஆம் உட்பிரிவின்படி செலுத்தப்படவேண்டிய தொகையானது, 56 ஆம் பிரிவின்படி தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகத்தால் பல்கலைக்கழகத்திற்கு செலுத்தப்பட வேண்டிய தொகைகளுக்கு கூடுதலான தொகையாக அமைந்திருத்தல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 37/1987 பொருந்தாது.

68. (1), (2) முதல் (7) வரையிலான உட்பிரிவுகளின் வகைமுறைகளுக்குட்பட்டு, 1987 ஆம் ஆண்டு சட்டமானது, குறிக்கப்பட்ட தேதியன்றும் அது முதற்கொண்டும், இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் பொருந்துகிற கல்லூரி மற்றும் நிறுவனம் ஒவ்வொன்றையும் பொறுத்த அளவில், பொருந்துவது அற்றுப் போதல் வேண்டும்.

(2) அவ்வாறு அற்றுப்போவதானது,—

(a) இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் பொருந்துகின்ற கல்லூரிகள் மற்றும் நிறுவனங்களை பொறுத்த அளவில், 1987 ஆம் ஆண்டுச் சட்டத்தின், முந்தைய செயற்பாட்டையோ; அல்லது

(b) 1987—ஆம் ஆண்டு சட்டத்திற்கெதிராகப் புரியப்பட்ட குற்றச் செயல் எதனையும் பொறுத்த அளவில் ஏற்க நேரிட்ட தண்டம், தண்ட இழப்பு அல்லது தண்டனை எதனையுமோ; அல்லது

(c) அத்தகைய தண்டம், தண்ட இழப்பு அல்லது தண்டனை தொடர்பான புலனாய்வு, சட்ட நடவடிக்கை அல்லது தீர்வழி எதையும் பாதிக்கலாகாது மற்றும் இந்தச்சட்டம் நிறைவேற்றப்படாதது போன்றே, அத்தகைய புலனாய்வு, சட்ட நடவடிக்கை அல்லது தீர்வழி எதுவும் தொடுக்கப்படலாம், தொடர்ந்து நடத்தப்படலாம், அல்லது நிறைவேற்றப்படலாம் மற்றும் அத்தகைய தண்டம், தண்ட இழப்பு அல்லது தண்டனை எதுவும் விதிக்கப்படலாம்.

(3) (1) ஆம் உட்பிரிவில் என்ன அடங்கியிருந்த போதிலும், 1987 ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட மற்றும் குறிக்கப்பட்ட தேதியில் செல்லாற்றல் பெற்றுள்ள நிலைவிதிகள், துணை முறை விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகள் அனைத்தும், இந்தச் சட்டத்தின் கீழ் செய்யப்படக்கூடிய நிலைவிதிகள், துணை முறை விதிகள் மற்றும் ஒழுங்கு முறை விதிகளால் மாற்றி அமைக்கப்படுகின்ற வரையில், அவை இந்தச் சட்டத்தின், வகைமுறைகளுடன் முரணாக இல்லாதிருக்கின்ற அளவுக்கு பல்கலைக்கழகத்தின் கல்லூரிகள் மற்றும் நிறுவனங்கள் தொடர்பாக தொடர்ந்து நடைமுறையில் இருந்து வருதல் வேண்டும்.

(4) இந்தச் சட்டத்தில், (3) ஆம் உட்பிரிவின்படி தொடர்ந்து செல்லாற்றல் பெற்று அல்லது இந்தச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட நிலை விதிகள், துணை முறை விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகளில் என்ன அடங்கியிருந்த போதிலும், குறிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட அல்லது அதனால் ஒப்புதல் அளிக்கப்பெற்ற பேணிவரப்பட்ட பல்கலைக்கழகப் பரப்பிடத்திற்குள் இருக்கின்ற கல்லூரி ஒன்றின் மற்றும் அந்தப் பல்கலைக்கழகத் துறைகளில் மாணவராய் இருந்திருக்கின்ற அல்லது தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகத்தின் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதியின் தேர்வுகளில் எதையும் எழுதுவதற்குத் தகுதி வாய்ந்தவராக இருந்திருக்கின்ற ஒவ்வொரு நபரும் பல்கலைக்கழகத்தில் தனது குறித்த காலப் படிப்பினை நிறைவு செய்ய அனுமதிக்கப்படுதல் வேண்டும் மற்றும் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகத்தின் குறித்தகால படிப்பிற்கிணங்க தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகத்தால் தீர்மானிக்கப்படலாகும் அத்தகைய மாணவர்களுக்கு, அத்தகைய கால அளவுக்கு மற்றும் அத்தகைய முறையில் பயிற்றுவித்தல், கற்பித்தல் மற்றும் பயிற்சிக்கான ஏற்பாடுகளை பல்கலைக்கழகம் செய்தல் வேண்டும் மற்றும் அத்தகைய மாணவர்கள் அந்தக் கால அளவின் போது தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகத்தால் வைக்கப்படும் அல்லது நடத்தப்படும் தேர்வுகளுக்கு ஏற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் அத்தகைய தேர்வுகளின் முடிவின் பேரில் தகுதி பெற்ற மாணவர்கட்கு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகத்தின் நேரிடையான பட்டம், பட்டயம் அல்லது பிற கல்விச் சிறப்புகள், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவபல்கலைக்கழகத்தால் அளிக்கப்படுதல் வேண்டும்.

(5) குறிக்கப்பட்ட நாளுக்கு முன்பு,—

(a) தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகத்தால் இணைக்கப்பட்ட; மற்றும்

(b) தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகத்தின் பட்டத் தேர்வுக்கு ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான குறித்த காலப்படிப்பிற்கு வகை செய்கின்ற இணைப்புப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பல்கலைக்கழகப் பரப்பிடத்திற்குள் உள்ள சித்தா, ஆயுர்வேதா, யுனானி, யோகா மற்றும் இயற்கை மருத்துவம் மற்றும் ஓமியோபதி மருத்துவக் கல்லூரிகள் அனைத்தும் இந்தச்சட்டத்தின்படி, பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட கல்லூரிகளாகக் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் இந்தச்சட்டத்தின் வகைமுறைகளாவை இயன்ற அளவுக்கு அதற்கிணங்கியபடியே பொருத்துதல் வேண்டும்.

(6) குறிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் பட்டங்கள் மற்றும் பட்டயங்களுக்கான தேர்வுகளுக்கு ஏற்றுக்கொள்ளப் படுவதற்கான குறித்த காலம் படிப்பிற்கு வகை செய்கின்ற கல்லூரிகளாக அந்த பல்கலைக்கழகத்தினால் தொடர்ந்து ஏற்பிசைவளிக்க பெறுகின்ற, பல்கலைக்கழக பரப்பிடத்திற்குள் உள்ள அனைத்து சித்த மருத்துவம், ஆயுர்வேதா, யுனானி, யோகா & இயற்கை மருத்துவம் மற்றும் ஓமியோபதி மருத்துவக் கல்லூரிகளும், இந்தச் சட்டத்தின் படி பல்கலைக்கழகத்தால் நேர்வுக்கேற்ப ஏற்பிசைவளிக்கப் பெற்ற அல்லது ஒப்புதலளிக்கப்பெற்ற கல்லூரிகளாக கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் இந்தச் சட்டத்தின் வகைமுறைகளானவை இயன்ற அளவுக்கு அதற்கிணங்கியபடியே பொருந்துதல் வேண்டும்.

(7) குறித்த தேதிக்கு முன்னர் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகத்தால் தொடர்ந்து ஏற்பிசைவளிக்க பெற்று வருகின்ற பல்கலைக்கழக பரப்பிடத்திற்குள் உள்ள இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதியின் மாணவர்களுக்கு தங்கும் வசதி வழங்கும் அனைத்து தங்கும் விடுதிகள் இந்தச் சட்டத்தின் படி பல்கலைக்கழகத்தால் ஏற்பிசைவளிக்க பெற்ற தங்கும் விடுதிகளாக கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் இந்தச் சட்டத்தின் வகைமுறைகளானவை இயன்ற அளவுக்கு அதற்கிணங்கியபடியே பொருந்துதல் வேண்டும்.

(8) (2) ஆம் உட்பிரிவின் வகைமுறைகளுக்குட்பட்டு, ஆனால் (3) முதல் (7) வரையிலான உட்பிரிவுகளின் வகைமுறைகளுக்கு ஊறில்லாமல், இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் பொருந்துகின்ற பரப்பிடங்கள் எதனையும் பொறுத்து, 1987 ஆம் ஆண்டு சட்டத்தின் வகைமுறை எதனின்படியும் குறிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் செய்யப்பட்ட செயல் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும், இந்தச் சட்டத்தின் நேரிணையான வகைமுறையின்படி செய்யப்பட்ட செயல் எதனாலும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதனாலும் தள்ளி வைக்கப்பட்டாலன்றியும் தள்ளி வைக்கப்படுகின்ற வரையிலும் இந்தச்சட்டத்தின் நேரிணையான வகைமுறையின்படி செய்யப்பட்டிருப்பதாக அல்லது எடுக்கப்பட்டிருப்பதாக கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் அதன்படி தொடர்ந்து செயல் விளைவு பெற்றிருத்தல் வேண்டும்.

சிறப்பு நியமன முறை.

69. (1) ஆட்சிக்குழு தான் பொருத்தமெனக் கருதுகிற அத்தகைய வரையறைகள் மற்றும் நிபந்தனைகளின் பேரில், பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் பதவி ஒன்றை ஏற்றுக் கொள்ளுமாறு, உயர்கல்வி சிறப்பையும் தொழில்முறைத் தேர்ச்சிப் பேறுகளையும் பெற்றுள்ள நபரொருவரை அழைக்கலாம் மற்றும் அவர் ஏற்றுக் கொண்டதன் பேரில், அவரை அப்பதவிக்கு நியமிக்கலாம்.

(2) ஆட்சிக்குழு, துணை முறை விதிகளில் விதிக்கப்பட்டுள்ள முறைக்கிணங்க கூட்டுச் செயல் திட்டமொன்றை மேற்கொள்வதற்காக, பிற பல்கலைக்கழகம் அல்லது அமைப்பு எதிலேனும் பணிபுரிகின்ற ஆசிரியர் ஒருவரையோ அல்லது கல்விப் பணியாளர் தொகுதியின் பிற உறுப்பினர் எவரையுமோ நியமிக்கலாம்.

இணைக்கப்பட்ட கல்லூரி மீதான அறிக்கை.

70. ஆட்சிக்குழுவானது, குறிக்கப்பட்ட தேதியிலிருந்து ஒவ்வொரு மூன்றாண்டுகளின் முடிவிலும், பல்கலைக்கழகப் பரப்பிடத்திற்குள் உள்ள இணைக்கப்பட்ட மற்றும் ஒப்புதலளிக்கப்பட்ட கல்லூரிகளின் நிலையைப் பற்றி அரசிற்கு அறிக்கையொன்றை பணிந்தனுப்புதல் வேண்டும். அரசு, அவ்வறிக்கையின் மீது தான் பொருத்தமெனக் கருதும் நடவடிக்கையினை எடுத்தல் வேண்டும்.

இணைப்புப் பட்டியலை திருத்துவதற்கான அதிகாரம்.

71. அரசு அறிவிப்பின் மூலம் இணைப்புப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள கல்லூரி அல்லது நிறுவனம் எதிலும் மாற்றம், திருத்தம் அல்லது இணைப்புப் பட்டியலில் சேர்த்தல் அல்லது நீக்கம் செய்யலாம் மற்றும் அத்தகைய அறிவிக்கை பிறப்பிக்கப்பட்டவுடன், இணைப்புப் பட்டியலானது அதற்கிணங்கிய வகையில் திருத்தம் செய்ததாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

72. (1) குறிக்கப்பட்ட தேதிக்குப் பின்னர் பல்கலைக்கழக அதிகார அமைப்பு எதையேனும் முதல் முதலில் அமைத்துருவாக்குதல் குறித்தோ அல்லது மீண்டும் அமைத்துருவாக்குதல் குறித்தோ, அல்லது பிறவாறு இந்தச் சட்டத்தின் வகை முறைகளைச் செயல்படுத்துதல் குறித்தோ இடர்ப்பாடு ஏதேனும் எழுமானால், அரசு, அறிவிக்கையின் மூலமாக அந்த இடர்ப்பாட்டை நீக்குவதற்காக தேவையானதென்று அல்லது உகந்ததென்று தனக்குத்தோன்றக் கூடிய, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு ஒவ்வாதவையாயிராத வகைமுறையைச் செய்யலாம்: இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

வரம்புரையாக, அத்தகைய அறிவிக்கை எதுவும் 3 ஆம் பிரிவின்படி பல்கலைக்கழகம் நிறுவியமைக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்றாண்டுகள் முடிவடைந்ததற்கு பின்பு, பிறப்பிக்கப்படுதலாகாது.

(2) (1) ஆம் உட்பிரிவின்படியோ அல்லது இந்தச் சட்டத்தின் பிறவகை முறைகள் எவற்றின்படியோ பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை ஒவ்வொன்றும் அது பிறப்பிக்கப்பட்ட பின்பு, நடைமுறைக்கு இயன்ற விரைவில் சட்டமன்றப் பேரவையின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அது, அவ்வாறு வைக்கப்படும் கூட்டத்தொடர் அல்லது அடுத்த கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பு, அத்தகைய அறிவிக்கை எதிலும் மாறுதல் எதையேனும் சட்டமன்றப் பேரவையானது செய்யுமானால், அல்லது அந்த அறிவிக்கை பிறப்பிக்கப்படலாகாது என்று சட்டமன்றப் பேரவை முடிவு செய்யுமானால், அந்த அறிவிக்கையானது அதன் பின்பு அத்தகைய மாற்றியமைக்கப்பட்ட வடிவத்தில் மட்டுமே செல்லாற்றல் பெறுதல் வேண்டும்; அல்லது நேர்விற்கேற்ப, செல்லாற்றல் பெறாதுபோதல் வேண்டும்; எனினும், அத்தகைய மாறுதல் அல்லது நீக்கம் எதுவும் அந்த அறிவிக்கையின்படி முன்னதாகச் செய்யப்பட்ட ஏதொன்றின் செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

73. அரசானது, அவ்வப்பொழுது இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்குச் செயல் வடிவம் கொடுப்பதற்காக தான் பொருத்தமெனக் கருதுகிற அத்தகைய பணிப்புரைகளை பல்கலைக்கழகத்திற்குப் பிறப்பிக்கலாம் மற்றும் அத்தகைய பணிப்புரைகளுக்கு இணங்கி நடப்பது பல்கலைக்கழகத்தின் கடமையாகும். பணிப்புரைகள் வழங்க அரசுக்கு உள்ள அதிகாரம்.

74. 1987 ஆம் ஆண்டு சட்டத்தின் இணைப்புப் பட்டியலில், ''நிறுவனங்களின் பட்டியல்'', என்ற தலைப்பின் கீழ், துணைத் தலைப்புகள், ''II. அரசு மருத்துவக் கல்லூரிகள்-இந்திய மருத்துவ கல்லூரி இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள'' மற்றும் ''தனியார் மருத்துவக் கல்லூரிகள்'' மற்றும் அது தொடர்பான உள்ளீடுகள் அனைத்தும் விட்டுவிடப்படுதல் வேண்டும். 1987 ஆம் ஆண்டு சட்டத்தின் இணைப்புப் பட்டியலுக்கான திருத்தம்.

**இணைப்புப் பட்டியல்**

**[1(3) (a) மற்றும் 71 ஆம் பிரிவைக் காண்க]**

**நிறுவனங்களின் பட்டியல்**

**I. சித்த மருத்துவக் கல்லூரிகள்**

**A. அரசு சித்த மருத்துவக் கல்லூரிகள்**

1. அரசு சித்த மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம்.
2. அரசு சித்த மருத்துவக் கல்லூரி, அரும்பாக்கம், சென்னை மாவட்டம்.
3. தேசிய சித்த மருத்துவ நிறுவனம், சென்னை மாவட்டம்.

**B. தனியார் சித்த மருத்துவக் கல்லூரிகள்**

1. அகில திருவிதாங்கூர் சித்த வைத்திய சங்கம் சித்த மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, முஞ்சிறை, கன்னியாகுமரி மாவட்டம்.
2. எக்செல் சித்த மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம், கொமாரபாளையம், நாமக்கல் மாவட்டம்.
3. JSA சித்த மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம், பாலி, உளுந்தூர்பேட்டை, கள்ளக்குறிச்சி மாவட்டம்.
4. மரியா சித்த மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, திருவட்டார், கன்னியாகுமரி மாவட்டம்.
5. நந்தா சித்த மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, பிச்சாண்டம்பாளையம் அஞ்சல், ஈரோடு மாவட்டம்.
6. RVS சித்த மருத்துவக் கல்லூரி & மருத்துவமனை, கண்ணம்பாளையம், கோயம்புத்தூர் மாவட்டம்.
7. சிவராஜ் சித்த மருத்துவக் கல்லூரி, சேலம் மாவட்டம்.
8. ஸ்ரீ சாய்ராம் சித்த மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம், சென்னை மாவட்டம்.
9. வேலுமயிலு சித்த மருத்துவக் கல்லூரி, ஸ்ரீபெரும்புதூர், காஞ்சிபுரம் மாவட்டம்.

**II. ஆயுர்வேத மருத்துவக் கல்லூரிகள்**

**A. அரசு ஆயுர்வேத மருத்துவக் கல்லூரிகள்**

1. அரசு ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.

**B. தனியார் ஆயுர்வேத மருத்துவக் கல்லூரிகள்**

1. ஆயுர்வேத கல்லூரி, சூலூர், கோவை மாவட்டம்.
2. தர்மா ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, ஸ்ரீபெரும்புதூர், காஞ்சிபுரம் மாவட்டம்.
3. ஸ்ரீ சாய்ராம் ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம், சென்னை மாவட்டம்.
4. மரியா ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, திருவட்டார், கன்னியாகுமரி மாவட்டம்.
5. நந்தா ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி, பிச்சாண்டம்பாளையம் அஞ்சல், ஈரோடு மாவட்டம்.

**III. யுனானி மருத்துவக் கல்லூரிகள்**

**A. அரசு யுனானி மருத்துவக் கல்லூரி**

1. அரசு யுனானி மருத்துவக் கல்லூரி, அரும்பாக்கம், சென்னை மாவட்டம்.

**IV. யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரிகள்**

**A. அரசு யோகா & இயற்கை மருத்துவக் கல்லூரிகள்**

1. அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரி, அரும்பாக்கம், சென்னை மாவட்டம்

**B. தனியார் யோகா & இயற்கை மருத்துவக் கல்லூரிகள்**

1. அன்னை இயற்கை மருத்துவம் மற்றும் யோகா அறிவியல் கல்லூரி, கோவிலாச்சேரி, தஞ்சாவூர் மாவட்டம்.
2. அத்தி இயற்கை மருத்துவம் மற்றும் யோகா மருத்துவக் கல்லூரி, குடியாத்தம், வேலூர் மாவட்டம்.

3. எக்செல் இயற்கை மருத்துவம் மற்றும் யோகா மருத்துவக் கல்லூரி, கொமாரபாளையம் (TK) நாமக்கல் மாவட்டம்.
4. GTN இயற்கை மருத்துவம் மற்றும் யோக அறிவியல் மற்றும் ஆராய்ச்சி மையம், திண்டுக்கல் மாவட்டம்.
5. ஸ்ரீ இந்திரா கணேசன் மருத்துவ அறிவியல் நிறுவனம், இயற்கை மருத்துவம் மற்றும் யோகா மருத்துவக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
6. JSS இயற்கை மருத்துவம் மற்றும் யோக அறிவியல் நிறுவனம், நவக்கரை, கோவை மாவட்டம்.
7. கொங்கு இயற்கை மருத்துவம் மற்றும் யோகா மருத்துவக் கல்லூரி, தோப்புப்பாளையம் (PO), ஈரோடு மாவட்டம்.
8. கிருஷ்ணா இயற்கை மருத்துவம் மற்றும் யோகா மருத்துவக் கல்லூரி, கோட்டைமேடு, திருச்சி மாவட்டம்.
9. அன்னை தெரசா இயற்கை மருத்துவம் மற்றும் யோகா மருத்துவக் கல்லூரி, வீரப்பட்டி கிராமம், புதுக்கோட்டை மாவட்டம்.
10. நந்தா இயற்கை மருத்துவம் மற்றும் யோகா மருத்துவக் கல்லூரி, பிச்சாண்டம்பாளையம் அஞ்சல், ஈரோடு மாவட்டம்.
11. S. தங்கப்பழம் இயற்கை மருத்துவக் கல்லூரி யோக அறிவியல் ஆராய்ச்சி மையம், வாசுதேவநல்லூர், தென்காசி மாவட்டம்.
12. சர் ஐசக் நியூட்டன் இயற்கை மருத்துவம் மற்றும் யோகா மருத்துவக் கல்லூரி, அந்தணப்பேட்டை – அஞ்சல், நாகப்பட்டினம் மாவட்டம்.
13. சிவராஜ் இயற்கை மருத்துவம் மற்றும் யோகா மருத்துவக் கல்லூரி, பெருமாம்பட்டி அஞ்சல், சேலம் மாவட்டம்.
14. சோனா இயற்கை மருத்துவம் மற்றும் யோகா மருத்துவக் கல்லூரி, கந்தர்கவுளமாணிக்கம் அஞ்சல், சங்கரி தாலுக்கா, சேலம் மாவட்டம்.
15. ஸ்ரீ ராமகிருஷ்ணா யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரி, குலசேகரம், கன்னியாகுமரி மாவட்டம்.
16. SVS மருத்துவக் கல்லூரி யோகா மற்றும் இயற்கை மருத்துவம் மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், கள்ளக்குறிச்சி மாவட்டம்.
17. சுவாமி விவேகானந்தா இயற்கை மருத்துவம் மற்றும் யோகா மருத்துவக் கல்லூரி, சங்கரி, சேலம் மாவட்டம்.

## V. ஓமியோபதி மருத்துவக் கல்லூரிகள்

### A. அரசு ஓமியோபதி மருத்துவக் கல்லூரிகள்

1. அரசு ஓமியோபதி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, திருமங்கலம், மதுரை மாவட்டம்.

### B. தனியார் ஓமியோபதி மருத்துவக் கல்லூரிகள்

1. டாக்டர். ஹானிமன் ஓமியோபதி மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம், ராசிபுரம் மாவட்டம்.
2. எக்செல் ஓமியோபதி மருத்துவக் கல்லூரி, பல்லக்காபாளையம், நாமக்கல் மாவட்டம்.
3. மரியா ஓமியோபதி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, திருவட்டார் அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம்.
4. மார்ட்டின் ஓமியோபதி மருத்துவக் கல்லூரி, ஜி.என். மில்ஸ் (பி.ஓ.) கோயம்புத்தூர் மாவட்டம்.
5. RVS ஓமியோபதி மருத்துவக் கல்லூரி, 242–பி–திருச்சி சாலை, சூலூர், கோயம்புத்தூர் மாவட்டம்.
6. S.V.S ஓமியோபதி மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், கள்ளக்குறிச்சி, விழுப்புரம் மாவட்டம்.
7. சாரதா கிருஷ்ணா ஓமியோபதி மருத்துவக் கல்லூரி, குலசேகரம், கன்னியாகுமரி மாவட்டம்.
8. சிவராஜ் ஓமியோபதி மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சேலம் மாவட்டம்.
9. ஸ்ரீ சாய்ராம் ஓமியோபதி மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம், சென்னை மாவட்டம்.
10. வெங்கடேஸ்வரா ஓமியோபதி மருத்துவக் கல்லூரி, போரூர், சென்னை மாவட்டம்.
11. ஒயிட் மெமோரியல் ஓமியோபதி மருத்துவக் கல்லூரி, ஆத்தூர், கன்னியாகுமரி மாவட்டம்.

**நோக்கக் காரண விளக்கவுரை**

உலகம் முழுவதும் பல்வேறு பாரம்பரிய பண்பாடுகள், பல்வேறு மருத்துவ முறைகளுக்கு வழிவகுத்தன. தமிழ் முனிவர்கள் மற்றும் இந்தியாவின் பிற பகுதிகளில் உள்ள முனிவர்கள் மனித உடலின் செயல்பாடு மற்றும் நோய்களைக் குணப்படுத்துவதற்கான விதிமுறைகளில் பாரம்பரிய அறிவைக் கொண்டிருந்தனர். அதற்கிணங்கிய வகையில், சித்த மருத்துவ பாரம்பரியமானது தமிழ்நாட்டில் உள்ள சித்தர்களால் உருவாக்கப்பட்டது. இதேபோல் ஆயுர்வேதா மற்றும் யோகா ஆகியவை இந்தியா முழுவதிலும் வளர்ச்சியடைந்தன. ஓமியோபதி மற்றும் யுனானி ஆகிய பாரம்பரிய சிகிச்சையானது ஆரம்பக் காலத்தில் இந்தியாவிற்கு வெளியே உருவாகியிருந்தாலும், இந்திய கலாச்சாரத்தில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

2. ஆயுஷ் (ஆயுர்வேதா, யோகா & இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா மற்றும் ஓமியோபதி) மருத்துவ முறைகள் வளமான பாரம்பரிய மற்றும் இலக்கியங்களைக் கொண்டுள்ளன. சித்த மருத்துவம் மற்றும் பிற பாரம்பரிய முறை மருந்துகளின் அறிவியல் முறை மதிப்பீடானது, அதன் நன்மைகள், மனித இனம் முழுவதற்கும் சென்றடையும் வகையில், பரவிட மேலும் ஆராய்ச்சி செய்வது தேவையாகிறது. சித்த மருத்துவம் மற்றும் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதியின் முறைகள் பிறவற்றிற்கு, ஆராய்ச்சிக்கான முக்கியத்துவம் அளித்து மேம்படுத்துவதற்காக, அதன் நோக்கங்களுக்காக தனி சித்த மருத்துவப் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவலாம் என அரசு கருதுகிறது.

3. 2021–22 ஆம் ஆண்டிற்கான சட்டமன்றப் பேரவையின் நிதி அறிக்கை உரையின் போது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் மாநிலத்தின் பாரம்பரிய மருத்துவ முறையின் பெருமையை போற்றும் வகையில் இந்திய மருத்துவ முறைகளுக்கான சித்த மருத்துவ பல்கலைக்கழகம் ஒன்றை தனியாக அமைப்பதற்கு, ரூ.2.00 கோடி முதலில் ஒதுக்கப்படும் என்று அறிவித்தார். அதைத் தொடர்ந்து நடப்பு நிதியாண்டுக்கான (2021 – 2022) மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கான மானியக் கோரிக்கையின் போது, சென்னைக்கு அருகில் இந்திய மருத்துவ முறைகளுக்கான தனி சித்த மருத்துவ பல்கலைக்கழகம் ஒன்று அமைக்கப்படும் என்று மாண்புமிகு மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கான அமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் அறிவித்தார்.

4. இந்தச் சட்டமுன்வடிவானது மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**திரு. மா. சுப்பிரமணியன்,**
*மருத்துவம் மற்றும் மக்கள்*
*நல்வாழ்வுத்துறை அமைச்சர்.*

**சட்டமியற்றும் அதிகார ஒப்படைவு பற்றி குறிப்பு**

இச்சட்ட முன்வடிவின் 1 (4), 2(r), 5, 8, 11 (3), 12(11), 13, 14. 15, 17, 19, 22, 25, 26(1), 27, 29(7)(f), 30(3)(a), 31, 33, 34, 36, 37, 38, 39, 40, 41, 44, 45, 46, 47, 48, 49, 50(1), 51, 52, 54, 56(2)(a), 59, 65, 71, 72 மற்றும் 73 ஆகிய கூறுகள் பல்கலைக்கழகத்தின் ஆட்சிப்பேரவை, ஆட்சிக்குழு மற்றும் பிற அதிகார அமைப்புகளின் முறைகளை வகுத்துரைப்பதற்கு மற்றும் முன்மொழியப்பட்ட இயற்றுச் சட்டத்தின் குறித்த வகைமுறைகளுக்கு செயல்வடிவம் கொடுக்க மற்றும் நேர்விற்கேற்ப பொருத்தமான அறிவிக்கைகள், நிலைவிதிகள், அவசரச் சட்டங்கள், ஒழுங்கு முறை விதிகள் அல்லது பணிப்புரைகளை வழங்குவதின் மூலம் செயல்பாட்டிற்கு கொண்டுவர அரசுக்கு அதிகாரமளிக்கிறது

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையே அன்றி தனித்தன்மை வாய்ந்தவை அல்ல.

**திரு. மா. சுப்பிரமணியன்,**
*மருத்துவம் மற்றும் மக்கள்*
*நல்வாழ்வுத்துறை அமைச்சர்.*

### நிதி பற்றிய குறிப்பு

இச்சட்ட முன்வடிவானது 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு சித்த மருத்துவப் பல்கலைக்கழகச் சட்டமாக இயற்றப்படும் போது மற்றும் நடைமுறைக்கு கொண்டு வரப்படும்போது மாநிலத் தொகுநிதியத்திலிருந்து செலவு செய்ய நேரிடும். முன்மொழியப்பட்ட சட்டத்தின் விளைவாக மாநிலத் தொகு நிதியத்திலிருந்து ஏற்படக்கூடிய செலவினத்தை மிகத் துல்லியமாக எந்த கோணத்திலும் மதிப்பிட இயலாது.

**திரு. மா. சுப்பிரமணியன்,**
*மருத்துவம் மற்றும் மக்கள்*
*நல்வாழ்வுத்துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை,
2022 ஏப்ரல் 27.

கி. சீனிவாசன்,
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.